னாலே கர்மகர்த்தாவென்றது.

சிலர், மகம் புத்தி முதலானவையே கன்மபலத்தை யனு
பவிக்குமென்பர், அது கூடாது; அவைகட்கு ஜடமாகத்
சம்பந்த மின்மையால் போக்தாவாகமாட்டாவாம்.

ஆன்மா வ்யாபகனாயிருக்கபோதிலு மீஸ்வரனாலே கன்
மாநு குணமாக தேகவ் கிடைப்பதால் சுலபமாக என்றது.

இதுவரையிற் சொல்லிய விசேஷணங்கள் பொதுலி
லான்ம விலக்ஷணமாம். பரமாத்மாவாகவும் என்பது முதலா
யவர்களுக்கு மூன்றுவித பேதஞ் சொல்லப்படுகிறது.

ஞானம் யோகம் சக்யாசம் முதலானவையால் மாயை
கன்மங்களை விட்டு நீங்கி ஸ்வபாவசித்தமான மலசக்தியினா
லே மறைக்கப்பட்ட சிவதத்வத்தைக் காட்டும் விஞ்ஞான
மொன்று மாத்ர முடைமை விஞ்ஞானகல விலக்ஷணம்.

சித்ருபிகளாயும் மலத்திலேலே தூஷிக்கப்பட்டுமிருக்கு
மநேக ஆன்மாக்களில், மாயா கர்ம மல மூன்றுமுள்ள சக
லரென்னுஞ் சிலர்; கேவலமுதல் ப்ருதுலியந்தமான தத்வங்
களிலுட்பட்டிருக்கிறார்கள். கர்மம் மலம் இரண்டோடுங்
கூடி ப்ரளயாகலரென்னும் வேறு சிலர் மாயையிலிருக்கிறார்
கள். மலமாத்ரமுள்ள விஞ்ஞானகலரென்னும் வேறு சிலர்,
மாயைக்குமேல் சுத்தவித்தைக்குக் கிழிருக்கிறார்களென் றிரு
ப்பதால்; இவ்விடத்தில் விஞ்ஞானகலன் ப்ரளயாகலன்



சகலன் என்று ஒருமையாகச் சொல்லியிருக்கபோதிலும்,
ஜாதி யொருமையாகையாலே பலரென்று கொள்க.

புரியஷ்டக சரீரமாவது:— ச்ரோத்ரமந்த - க, சர்மாத்
வரையேந்த - க, ஞானேந்திரியமைந்த - க, கன்மேந்திரிய
மைந்த-க, அந்தக்கரணம்-க, முக்குணம்-க, ப்ரகிருதி-க,
கலாதிபஞ்சகம் - க, ஆகவெட்டும் புரியஷ்டகம் - சூக்கும
சரீரம். இது ப்ரளயாகலருக்கு.

சகலருக்குச் சூக்கும ஸ்தூல சரீர மிரண்டுமுண்டு.

ருக்கென்றது - ஆணவமலம். பசுத்வம் அஜ்ஞானம்
ஆவ்ருதி மூலம் ப்ருத்யு ருக்கு மூர்ச்சை அஜ்ஞானம் நீஹாரம்
அவித்தை பாபம சுகயம் முதலானவை ஆணவ மலத்தின்
பெயராகும்.

மாயை நேரிட பந்தக மாகாதாதலால் மாயையின் கா
ரியங்களாகிய கலாதிகளே மாயா பதத்திலேலே கொள்ள
வேண்டும்.

சுரபிஷ ஷகஸ் - என்றதால் மல பரிபாகத்திற்குத்
தக்கபடி சகலர்கட்கு ப்ரளயாகல பதங் கிடைத்த பின்பு
விஞ்ஞானகல பதங் கிடைக்கும். பின்பு ருத்ரர் மகேச்வரர் மகேஸ்வரர் சிவன் இவர்களுடைய பதங்கள் முறையே
கிடைக்கும். ப்ரளயாகல விஞ்ஞானகலர்களில் மலபரிபாகா
நுகுணமாகச் சிலருக்குச் சாயுச்யபதமும், சிலருக்கு ஸ்வா
ரூபாரபதமும் கிடைக்கும். சாயுச்யமாவது சிவலோடு சாம்
யம். மல மிகவும் பக்வமாகில் உடனே சிவபதங்கிடைக்கு
மென்றறிக.

மலம் பக்வமாக பலகாலஞ் செல்லுமாதலால் ஸ
விரோஷ என்றது. எப்போது பக்வமாகிறதோ அப்போதே
மோக்ஷமென்றறிக.

இவ்விடத்தில் விஞ்ஞானகல ப்ரளயாகல சகலர் மூவரும், பக்வமலர் அபக்வமலர் என்று தனித்தனி யிருவகையாராவர்.

இருவகையான விஞ்ஞானகலரில் பக்வமல ரிருவகையாராவர். அவர்களில் மிகவும் பரிபக்வமான மலமுடையவர் அநந்தாதிக ளெண்மர்; ஈச்வர தத்வத்தில் வாசஞ்செய்கின்றவர்கள். அவர்களைக் காட்டிலும் கொஞ்சம் அபக்வமான மலமுடையவர் சப்தகோடி மஹாமந்த்ரர்; சுத்தவித்யாதத்வத்தில் வாசஞ் செய்கின்றவர்கள். இவர்க ளெல்லோரும் பக்வமல ராதலால் பதிபதார்த்தத்திற் சேர்ந்தவர்கள். இவர்களைப் பரமேச்வரர் தாமே கேரிட அதிகாரமலத்தாலே கட்டிப் பின்பு மோக்ஷங் கொடுக்கிறார்; இவர்களைக்காட்டிலும் மிகவும் அபக்வமான மலமுடைய வேறு விஞ்ஞானகலர் அநேகம்பெயர் மாயா சுத்தவித்யா தத்வங்கட்கு நடுவில் வாசஞ்செய்கிறார்கள். இவர்கட்குப் பரமேச்வரர் மலபரிபாக தாரதம்யத்திற்குத் தக்கபடி மந்த்ரபதம் மந்த்ரேச்வரபதம் தமது பதத்தையும் கொடுத்து மோக்ஷங்கொடுக்கிறார்.

இருவகையான ப்ரளயாகலரில் பக்வ கர்மமலங்களையுடையவரிருவகையாராவர். அவர்களில் மிகவும் பக்குவமான கர்மமலங்களையுடையவர் மாயாகர்ப்பத்தில் வாசஞ் செய்யும் ஸுகண்டேச்வர முதலானவர் பதினெண்மர். அவர்களைக் காட்டிலும் கொஞ்சம் அபக்குவமான கர்மமலங்களையுடையவர், ப்ரம்மாண்டதாரகராக வெளியிலிருக்கும் சதருத்ரரும் அண்டத்திற் குள்ளிருக்கும் காலாக்நி ருத்ர முதலானவருமாம். இவர்கட்குக் கலாசம்பந்த மிருந்தபோதிலும் சகலரான அணுக்களைப்போல கலாதிகட்கு வசப்படாதவராதலால் பரமேச்வரர் தாமே கேரிடக் கர்ம மலபரிபாக தாரதம்யத்திற்குத்



தக்கபடி வித்யேச்வர பதங்கொடுத்துப் பின்பு மோக்ஷங் கொடுக்கிறார். இவர்களைக்காட்டிலும் மிகவும் அபக்வமான கர்மமலமுடைய வேறு ப்ரளயாகல ரகேகம்பெயர் மிஸ்ராத்வாலில் வாசஞ்செய்கிறார்கள். அவர்கட்குப் பரமேச்வரர் மோக்ஷங்கொடுக்கிறார்.

இருவகையான சகலர்களில் பரிபக்வமான மலமாயா கர்மங்களையுடையவர் ப்ரமாண்டத்திற்குள் விருக்கு மத்த புவநங்களில் வாசஞ் செய்கிறார்கள். இவர்கட்கு மல பரிபாகம் இருவினை யொப்பிலுலே சக்தி பாதானுகுணமாக வரும். சம்சாரத்தில் த்வேஷம், முக்தியில் விச்வாசம், சிவ பக்தி, குருசிச்ரூஷை முதலானவை மலபரிபாகம் வந்தவருக்கடையாளம். இம்மி தில்லாமை மலபரிபாகம் வாராதவர்க்கடையாளம். பரிபக்வமான பெயருக்குப் பரமேச்வரரே குருமூர்த்தமாக வந்து மலாதி பரிபாக தாரதம்யத்திற்குத் தக்கபடி மந்த்ரேச்வராதி பதங்கொடுத்து மோக்ஷங்கொடுக்கிறரென் றறிக. (நு)

அவதாரிகை.

மேல் மலமுதலான பாசபதார்த்தங்களின் பேதத்தைச் சொல்லுகிறார்.

சூ — ச்லோகம் 4.

நீஹாரோ நாதி ரேகோ நநு ஜலஜ மவ
த்ராதி மா காஞ்சிகேவ வ்யாபீகாரா ஞ நாசிவ்ரதி
வைரூப்யஜீர்ணவாரிகாரேகஸகிந்.। வாஸ்யம்ஸ்ரா
யுஸ்ரவொயவ்யஸ்தா-ம் ஸவதிபவிதா ஸோக்ஷ்ரதா
வாரதஜ்ஞ்ஞ கேஜ்ராஜையெஜ்ராம வாதஸ் கூரதி
ரநுகலிதா ரோயமிதீஸ்ரஸகிந்.॥ *

## வடவடி.

நீஹாரஃ - கூநாதிஃ - வனகஃ - உபஜ்ஞவஹவஃ. காதி³மா - காஹிகா - இவ - ஸ்வாயிகாராஜ நாஸி வ்ருகிவ-ரூஷஜ்ஞமாவாரிகா டெகஸுகிஃ-வாயுஃ. மொயஃ - அ - லொயஃ - ஸஃ - க - ஹவகி. யகஃ - ஹொகஜ்ஞகா - வாரதஜ்ஞஃ - கர்ம்மாதிஃ. யொம - வனகஃ - கஜ்கிம் - கூப-ருகமிதா - ரொய யிதீ³ - ஸ்ஸுஸுகிஃ.

(இதன் பொருள்.)

நீஹாரஃ — நீஹாரமென்னும் பெயருள்ள ஆணவமலமானது

கூநாதிஃ — ஒரு காலத்தி லுண்டான தல்லாமையால் அநாதியாகும்.

வனகஃ — அது, அநேகமல்ல வொன்றேயாம்.

உபஜ்ஞவஃ — ஆன்மாக்கட்கு ஸ்வபாவ சித்தமான மலமாகு மாதலால்

காதி³மாகாஹி கெவ — செம்பிற் களிம்புபோல்

(ஸூத்ரஃ) ஸ்வாயிகாராஜ நாஸிவ்ருகி — ஆன்மாக்கட்கு ஸஹஜமாயிருக்கும். பின்னு மந்த மலமானது, தனது அதிகாரத்தின் மூடிவி லழிகின்ற



வாரூஷஜ்ஞ மாவாரிகா டெகஸுகிஃ — புருஷனிற்றோறும் ஞானத்தை மறைக்கு மநேக சக்தியுள்ளது.

(கிஞ) — பின்னும்,

யகஃ — யாதொரு இந்த மலத்தினாலே,

ஹஃ — அந்தப் பசுவாகிய ஆன்மாவானவன்

வாயுஃ — பாசத்தை விட்டு நீங்காமற் கட்டுப்பட்டவனாகவும்,

மொயஃ — திரோதியினாலே சோதிக்கத் தக்கவனாகவும்,

லொயஃ — ஸர்வஜ்ஞத்வாதி குணமுள்ள சிவஸ்வரூபத்தைப் போதிக்கப்படத் தக்கவனாகவும்,

ஹவதி — ஆகிறான்.

கர்ம்மாதிஃ யொம — கர்ம்மம் மாயை முதலானவற்றின் சம்பந்த முண்டாயிருக்கவும்

ஹொகஜ்ஞகா — புருஷனுக்குப் போக்தாவாகுந் தன்மையும்,

வாரதஜ்ஞஃ யதொஹவதி — பராதீனனாகுந் தன்மையும், யாதொரு மலத்தினாலே யுண்டாகின்றதோ அப்படிக்கொத்த ஆணவமலமானது, கீழ்ச்சொன்ன குணமுள்ளதாம்.

IN13123-037 01/02/2010 © Institut Français de Pondichéry ifpindia.org

| | |
|---|---|
| ரொயயிதீர | திரோதாலத்தைச் செய்கின்ற |
| ஸஸஸஸகிஜ | சிவசக்தியாலது |
| வனசங்கஜகிம | இந்த மலத்தினுடைய பந்தனஞ் |
| | க்ருத்தியத்தை |
| சுநஙகுழிதா | அநுசரித்துச் செலுத்துகின்றது. |

தாத்பரியம்.

கருமமலம் மாயாமலங்களைப் போலே ஆணவமலம் கடி வில் வந்ததல்லாமையால், அகாதியென்றது.

அநேகமாகிய ஜடபதார்த்த மகித்திய மாதலால் ஜட மாய் நித்யமாயிருக்கு மாணவமலத்தை ஏகமென்றது.

சுநஙஜ வஹஹவஜ என்றதால் ஆன்மாவுடன் கூடப் பிறந்ததென் றர்த்தமல்ல ; ஆன்மாவிற் குள்ளபடி பிறப்பின் மையால். ஆனால் ஆன்மாக்கட்கு அகாதித்தமாய் மறைவா யிருக்கு மாணவமலமான தை கண்ணிற்குப் படலாதி ரோகம் போல வஸ்துவாகவே சொல்லப்படும். மலம் அவஸ்துவா கில் மூயற்கொம்புபோல் முழுதமில்லையாம். அப்போது எல் லோரும் மல நிவர்ம்பொருட்டு திகூஷாஞாநிகளிற் ப்ரவர் த்திப்பது வீணகவேண்டியதாகும்; ஆகலால் மல மகாதியாய் நித்யமாயிருக்கும் வஸ்துவேயாமென் றறிக.

செம்பிற்குக் களிம்புபோலென்றது, மல மகாதியென் றதற்கு த்ருஷ்டாந்தம். செம்பிற் களிம்பானது அகாதியா யொன்றாய் ஸஹஜமாயிருக்கும். மலமு மதுபோலாகும். செ ம்பிற் களிம்பு வந்ததற்குக் காரணமில்லை. அப்படியே ஆன் வென் அகாதிமல மிண்மையால் நிர்மலனானன். இவ்விதமாக



திருவுடைய ஸ்வரூபமும் ஸ்வபாவத்திற் சுத்தமாய் மகத் தமாயிருக்கும். படிக மேன சுத்தமாயிருக்கிறது? செம்பு ஏன் மலினமாயிருக்கிறது என்னில்? இவ்விஷயத்தில் காரண மெவ்வளவோ அவ்வளவே சிவனுக்கு மாணமாவிற்கும் சுத்தி தகத்திவத்தத்திற்கு காரணமாகும். மேலும் செம்பை மறை த்திருக்கும் களிம்பானது ரசசக்தியால் பேதிக்கப்பட்டு எப்படி நீங்குமோ அப்படியே ஆண்மாவை மறைத்திருக்கும் மலமும் சிவசக்தியால் பேதிக்கப்பட்டு நீங்கும். எப்படியி நிக்கு மூலியுண்டாவதில் உமிழித்தமோ, அப்படியே ஆன் மாவிற்குச் சரீராதிக ளுண்டாவதில் மலநிமித்தமாகு மென் றறிக.

ஆகில் ஆன்மா வ்யாபகன். அவனை மறைப்பதால் மலமு மவனை வ்யாபித்திருக்கும். ஆகவே வ்யாப்பிய வ்யாபகத்க ளாகிய மலானமாக்கட்கு அகாதியே மறைப்பதும் மறைக் கப்படுவதுமாகிய சம்பந்த மிருப்பதால், ஒருக்காலும் பிரிவி ல்லாமாதலால் ஸ்வபாவத்தில் மோகூமே யில்லையாமெ னினுஞ் சங்கைக் குத்தரங் கூறுகின்றனர். தனது அதிகாரமூ டிலிலிகின்ற புருஷனரூறு ஞானத்தை மறைக்கு மநேக சக்தியுள்ளதென்றது? தனது அதிகாரமாவது ஞானத்தை மறைப்பதேயாம். கண்ணிற்குப் படலம்போல மலத் த்ரவ்ய மாதலாலதற்குப் பாகமுண்டு. அத்தசையில் தன் சக்தியழி யும்.

மல மொன்றுதலால் அநேகாண்மாக்கட் குள்ளே யொரு வனுக்குப் பரிபாக தசையில் சிவசக்தியாலே மல நீங்குமா கில், எல்லா ஆண்மாக்கட்கும் நீங்கவேண்டிவரும். ஆகலா லொருவன மோகூதத்தில் எல்லோருக்கு மோகூம் வரவே ண்டி வருமென்று புருஷனரூறும் ஞானத்தை மறைக்கு மநேக சக்தியெனரூர். நித்யமாயும் வ்யாபகமாயு மிருக்கு

IN13123-038 01/02/2010 © Institut Français de Pondichéry ifpindia.org

மலத்திற்குப் புருஷன்மேலும் ஞானத்தை மறைக்குஞ் சக்திகளாகிய முண்டென் றெப்புக்கொள்ள வேண்டும். எப்படி அக்நியின் தாஹசக்தியானது ஸ்தம்பனாதி மந்த்ரத்தால் தடுக்கப்படுகிறதோ அப்படியே ஈஸ்வரனுடைய அநுக்ரஹ சக்தியினாலே மலசக்தியானது தடுக்கப்படுகிறது. அதனால் புருஷனைவிட்டு மலம் நீங்கினதென் றுபசாரமாகச் சொல்லப்படும்.

எப்படி அரிசியை மூடிக்கொண்டிருக்கு மமியானது பரிபாகதசையில் நீக்கப்படுகிறதோ அப்படியே மலசக்தியும் பரிபாகதசையில் சிவசக்தியால் நீக்கப்படும். அபக்வமான தசையி னுலக்கையாலே குத்தி னுரிசியு மழிவதுபோல அபக்வதசையில் மலத்தை நீக்கி னுலான்மாவிற்கு விகாரமுண்டாகும். செம்பின் களிம்பிற்குப் பரிபாகதசை ரசசம்போக காலத்தி லுண்டாகும். ஆதலால் பரிபாக காலத்தில்தான் மலசக்தி யழியுமென் றறிக.

ஆன்மாவிற்கு மலமிருப்பதால் பாசாதிகளால் கட்டப்படுகிறுன்; ஆதலால் திரோயால் ஷட்த்வசோதனை செய்ய வேண்டியவனுகிறுன். ஆன்மாவிற்கு மனமுதலான அந்தக்கரண மில்லாம லிருந்தபோதிலும் மலமுடியிருப்பதால் சோதிக்கத்தக்கவ னுகிறுனென்று கருத்து. சோதித்தபின் சாஸ்த்ரமுகமாக ஸர்வஜ்ஞத்வாதி குணமுள்ள சிவஸ்வரூபத்தை போதிக்கத்தக்கவனுகிறுன். சஹஜமான ஸர்வதோஷங்களு மழித்தபோதிலு மான்மா சின்மாத்ரமா யிருப்பதால் ஸர்வஜ்ஞத்வாதி குணங்களுக் கழிவில்லையாதலால் போதிக்கத்தக்கவ னுகிறுனென்று கருத்து.

மல மிருப்பதால் பசுவானவன் பாசத்தால் கட்டப்பட்டுச் சோதிக்கத்தக்கவ னுகிறு னுதலால் முறையே பாசுபதாதீக்ஷித்தி நீங்கினபோது மலம் நீங்கிற்றென்பது சித்தம்.



கூடி-ஒழி என்னு மாதி பதத்தால் மாயையுங் கூட்டுக. மாயை கர்ம மிரண்டின் சேர்க்கையிருந்த மான்மாவிற்குப் போக்தா வாகுந் தன்மையும் பரதந்திரனுக்குத் தன்மையும் மலத்தா லுண்டாகின்றது.

ஆன்மாவிற்குக் கர்மத்தி னுலேயே போக்த்ருத்வாந் தன்மையுண்டாகின்றது. போகத்தில் ராகமுதலானவை யேதுவாம். மலத்தா லாவதென்னெனில்? எப்படி யுலகத்தி லொரு புருஷனிடத்தில் திருட்டைக்கண்டு இவன் திருடனென்று விலங்கு முதலானவற்றுல் கட்டப்படுகிறுனு அப்படியே ஆன்மாவும் மல முள்ளவனென்று ராக முதலானவற்றுல் கட்டப்படுகிறுன். இல்லாவிடி லிவனுக்கு ராகாதிசம்பந்தமேது? ஆதலால் போக்த்ருத்வாந் தன்மையில் மல மேரிட நிமித்தமாகும். தேகவுற்பத்திக் கேதுவான மாயை பரம்பரையாக பக்தமாகும். சுகதுக்க ரூபமான போக ஹேதுவான கன்மமு மப்படியே பக்தமாகும். ஆதலால் மலத்தி னுலேயே ஆன்மாவிற்குக் கர்மாதி போகத்தில் பரதந்த்ரனுக்தன்மை சித்தமென்றறிக.

பின்னுமிந்த மலசக்தியானது தானே ஸ்வதந்த்ரமாக வான்மாவைக் கட்டவும் விடவு மாட்டாது. ஆனுல் சிவனது த்ரோதான சக்தியானது இதை யதிஷ்டித்துக் கட்டுதல் விடுதல் செய்யுமென்கிறார். ரௌரௌரீ ரௌரௌரீ என்று பின்னு மந்த த்ரோதான சக்தியும் சிவாதீனமாகவே கட்டுதல் விடுதல் செய்யுமென்று ரௌரௌரீ என்றார். சிவனே ஸர்வகர்த்தா, சக்திகாரணமென்று பிரசித்தம். இந்தச் சிவசக்தியே ப்ரசண்டோ யாம்போது அநுக்ரக சக்தியாமென்பர். திரோதான சக்தியே யுபசாரமாகப் பாசமுபையென்று சொல்லப்படு மென்றவாறு. (சூ)

அவதாரிகை.

இப்படி விஞ்ஞானகலராகிய ஆண்மவிஷயமான மலம் த்ரோதான சக்தியென்னும் பாச மிரண்டையுஞ் சொல்லி; இப்போது ப்ரளயாகலர் ஸகலரென்னு மாண்ம விஷயமான கர்மபாசத்தி விலக்கணங் கூறுகிறார்.

எ — மூ ரு கூ ழ.

ஹொமெஹ யெ-ரு மமெஹ தை-ஃ ஸ்விய ஹவிய
ஈ-ஸ்ரித ஹொமவ்ய வை-ஸ்கி ஈ-ரு மொ தத்தி ரவை
ஈநாதி வ்ரகி ந்ரு ந்ரியதம் வை-ஸ்ஹ்ஷ் ஹாவா ஷூ-ரூஷ்டி
வாஸ்ரீகாய-ரு சயை-ரு ஹாயவ் ஹவஜ்ர கயஸ்ரம் கூடி-ரு ய
டி-ரு ஹி ஹொமவ் வஹாவெ தாயாவ்வவாகம் ஸ்ரிகிடிகி
வஹிதம் ஹொமஹ்ம்வை-ரு ஸு கமாஜ்ஞி ॥ *

வ ஹ மெ ஹ ரூ ழ.

ஹெஹாமெஹ்ரு - யொமமெஹ தை-ஃ - விவியம் - சுவி-ஹ-ந-ஃ - ஸித்ர ஹொமவ் வை-ஸ்கி-ஃ - ந ஈ மொ தத்தி ரா-சுவி - கூநாதி - வ்ரகி-ந்ரு ந்ரியதம் - வை-ஸ்ஹ் ஹாவா ரு-ஷூ-ரூஷ்டம் - வாஸ்ரீகாய-ரு சயை-ரு ஹாயவ் - ஹவஜ்ர கயஸ்ரம் - கூடி-ரு-யடி-ரு ஹி - ஹொமவ்ம்-வாவெ - தாயாவ்வவாகம் - ஸ்ரிகிடிகி வஹிதம் - ஹொமஹ்ம் - வை-ரு ஸு - கமாஜ்ஞம்.

*



(இதன்பொருள்.)

| | |
|---|---|
| ஹெஹாமெஹ்ரு | சரீரமுதலானவற்றோடு |
| பொமமெஹ தை-ஃ | ஆண்மாக்கள் சேருகைக் கேதுவா யும், |
| விவியம் | நாநா ப்ரகாரமாயும், |
| சுவிய | பின்னும் |
| நை-ஃ | மனிதருக்கு |
| ஸித்ர ஹொமவ் வை-ஸ்கி-ஃ | பலவித்தங்களான போகங்கட் கும் பத்தி ஸ்தானமாயும், |
| நாஸொ தத்தி ரா | இறப்புப் பிறப்போடு |
| வஹிதமெவி | கூடியிருந்தபோதிலும் |
| கூநாதி | மலபாசத்தைப்போல ஸ்வபாவ சித்தமானதாயும், |
| வ்ரகி நரு ந்ரியதம் | புருஷ்ன்றோறுந் தனித்தனி யேற் பட்டதாகவும், |
| வை-ஸ்ஹ் ஹாவாசு | ஆண்மாவில் லம்ஸ்கார ரூபமாய்ச் ஸூக்ஷ்மமாயிருப்பதால் |
| ரூ-ரூஷ்டம் | இந்த்ரியங்களால் காணப்படாததா யும், |
| வாஸ்ரீகாய-ரு சயை-ரு ஹாயவ் | வாக்கு மனம் புத்தி சரீரம் பொரு ள் இவற்றால் சம்பாதிக்கத்தக்க தாயும், |

IN13123-040 01/02/2010 © Institut Français de Pondichéry ifpindia.org

ஸஜாதீயம் — கதுகரணபுவநாதி காரியங்களேயுண்டாகிக் கால அளவிட்டுத் தரிப்பதாயும்,

ஹேமயம் யஜுர்வேதி கஉ — புசிக்கத் தக்கதாயும், தர்ம தர்ம ரூபமாயு மிருக்கும். செய்யப்படுகின்றமையால் கர்ம மென்னும் பெயர்கொண்ட பாசமானது

ஸாவித்ரி வ்ரதாயாவவாகம — ஸர்வபூத ஸம்ஹாரகாலத்தில் மாயையில் பரிபாகத்தை யடைவதாயும்,

ஹிரண்யகர்ப்ப ஸஹிதம் — மாயையில் ஸம்ஸ்காரரூபமாக இருக்கிறதென்று புத்தியாலறியத் தக்கதாயும்,

கௌரீஹம் — ப்ருதுவித்தவமுதல் கலாதத்வபரியந்த மங்குள்ள ஆன்மாக்கட்கு

ஹேமவஸ்த்ர வஸாஸு — சுகதுக்காதி போகத்தை கொடுப்பதாயு மாகும்.

தாத்பரியம்.

சரீரமுதலானவை யென்றதால், ஸ்தூல சூக்கும சரீரங்களும் மனமுதலான ஞானேந்திரியங்களும் கன்மேந்திரியங்களும் சப்தாதி விஷயங்களுங் கூட்டப்படும். அவற்றோடு ஆன்மா சேருதற்குக் கன்மமே காரணமென் றறுதிக்கப்படும்.



ஆன்மாக்கட்குச் சரீரேந்திரிய விஷயங்கள் பலவிதமாயிருப்பதாலதற் கேதுவாங் கன்மமும் பலவிதமாமென்பது விஷயம் என்னுர். அஃதெங்ஙனெனில்? தேவதைகள் மனிதர்கள் பசுபக்ஷி மிருகாதிகள் இவர்கட்குச் சரீரங்கள் வேறுபட்டிருக்கின்றன. இந்திரியங்களும் யானைகளுக்கு நாக் குன்முகமாயிருக்கிறது. சர்ப்பங்களுக்குக் கண்களே காதுகள். கோட்டான்களுக்குக் கண்கள் மத்யாஹ்நத்திற் குருடாயிருக்கின்றன. பூனைகளுக்குக் கண்கள் ராத்ரியில் அதிகப் ப்ரகாசங்களாயிருக்கின்றன. மனிதர்களுக்குக் கண்கள் ராத்திரியில் சொஞ்சப் ப்ரகாசங்களா யிருக்கின்றன. இப்படிப் பலவிதங்களா யிருக்கின்றன.

விஷயங்களோவெனில்? சாதகபக்ஷிகளுக் காஹாரம் மேகத்தில்லிருந்து விழும் ஜலத் திவலையாம். அன்னம வண்டு இவற்றிற்குத் தாமரைப்பூந்தாதுதேன் இவை யாகாரம். மாடு முதலானவற்றிற்குப் புல் முதலானவை யாகாரம். தேவதைகட்கு அம்ருதமாகாரம். மனிதர்கட்கு நெல் முதலானவை யாகாரம். இப்படிப் பலவிதங்களா யிருக்கும். ஆதலாலிப்படிக்கொத்த சரீராதிகளுக்குக் காரணமாய் கருமமும் பலவிதமா மென்றவாறு.

மனிதருக்கென்றது ஆன்மாக்களுக்கென் றறிக. பலவித போகவுற்பத்தி ஸ்தானமாவது, தேவர்களுக்கு ஸ்வர்க்கம். மனிதர்கட்குப் பூலோகம். அதில் சிலருக்கு ராஜ்யாதிபத்யம். சிலருக்குத் தனாதிபத்யம். சிலருக்குத் தாரித்ரியம். இப்படிப் பலவிதமாகும். அதற்குற்பத்தி காரணங் கருமமென் றறிக.

தனுகரண புவனாதிகளுக்குப் பிறப்பிறப் புண்டாதலாலவற்றிற்கேதுவாங் கன்மத்திற்கும் பிறப்பிறப் புண்டென் றறிக. ஆதலால் புருடன்மேலும் ஜாதி ஆயுள போகம் முதலானவைத்

IN13123-041 01/02/2010 © Institut Français de Pondichéry ifpindia.org

தனித்தனி யேர்ப்பாடு செய்துகொண்டு அந்தந்தப் புவனவாசி களுக்குப் புவன தாரதம்மியத்திற்குத் தக்கபடி பலவிதங்களாய் ஆனமாக்களோடும் ஜக்மாந்த்ரங்களிலும் வருஞ் சரீரேந்திரிய விஷயங்களைக் கொடுக்க வல்லதாயிருக்கும்.

மலபாசம்போல கன்மபாசமும் ஸ்வபாவ சித்தமாதலால் அநாதியென்றது.

கர்மம் போகத்திற்குக் காரணமென்று சொல்லப்பட்டது. போகம் சுகதுக்கரூபமாயிருக்கும். அதற்கேதுவாங் கன்மம் சரீரமுண்டானபின் னுண்டாகுமாதலால் ஸ்ருஷ்டி யாரம்பத்தில் கன்மமின்மையால் சரீராதிக ளெப்படிவரும். ஆதலால் கன்மமநாதியென்றது கூடாதென்னில்? உத்தரம். ஸ்ருஷ்டி யாரம்பத்திலு மான்மாக்களுக்குப் பலவித தேஹசம்பந்த மிருப்பதால் கன்மமநாதியென்பது சித்தமே. அல்லாவிடில் பலவிதமாய்ச் சரீரம்வர நிமித்தமில்லையாதலால், இவ்விஷயத்தில் ராமகண்டபகவா னுரைசெய்ததாவது? பசு பக்ஷி மிருக ஸ்தாவர மனுஷ்யாதிகட்குச் சரீராதிகளும் போகங்களும் பலவிதங்களென்று ப்ரமாணமிருப்பதால், அவை கர்மமின்றி முடியாதலால், ஸ்ருஷ்டியாதிகாலத்திலும் வாசனரூபமாகக் கன்மமுண்டு. அது ப்ரவாகாநாதியென்ற கிரணகமவசநத்திற் குரைசெய்திருக்கின்றார். ஆதலால் வித்தமுனைபோல் கன்மமநாதியே.

உலகத்தில் ஒருவனுக்குப் பூமியை வெட்டும்போது நிதி கிடைக்கின்றது, ஒருவனுக்கு மரத்தடியில் போகும்போது மேலே கிளைவிழுந்து உயிர்ச்சேதம் வருகின்றது, இவ்விரண்டும் புண்யபாப கருமபலமாதலாலது அதிருஷ்ட மென்னப்படும்.

வாக்கு முதலானவற்றுல் சம்பாதிக்கத்தக்க தெனுமிதத வாக்கினுற்செய்வது சிவவிஷயங்களான ஸ்தோத்ரங்க



ளைப் படித்தலாகும். மனம் புத்தி இவற்றுலாகவேண்டியது சிவம்மரண த்யாகமாகும். சிவபூஜை முதலானவை சரீரசாத்யமாகும். சிவாலய முதலானவற்றைச் செய்தல் பொருளினுலே சாதிக்கப்படும்.

இப்படிக்கொத்த கன்மம் அசேதனமாய் ஈஸ்வராதியை யபேக்ஷிக்கின்றமையால் தூணைக்காரண மென்னப்படும். பின்னு மித்தக்கன்மமானது மாயையில் ஸம்ஸ்காரரூபமா யிருந்துகொண்டு அநுபவித்தபின் னழியும், இருவினை யொப்பாகும்போது சிவத்வக் தோற்றும், மறுபடி பிறப்பில்லை யென்றவாறு. (எ)

அவதாரிகை.

மேல் ஸகலரான ஆன்மாக்களுக்குரியதான மாயாபாச லக்ஷணங் கூறுகின்றார்.

அ—ஸ்ரீகழி.

ரோயாவும் விதுரஸகுரா வஸிமதகமம் கஷ்டவ்ரிதுகவீஜம் நிதயம் கரோதிகரொயிவ்ராகயதி நிவஸநம் தஸ்கயிதவ்யாவகஸு காயபூர விஷ்வகாஸா ஏவி ஏஸிவகரம் தொஹகம் ஸ்வாவகாலை ஸவ்ராதாவாஸ தெவம் வரகவிவ விதம் காரணம் வொயகம் தஸு ॥

வஉவெஏழி.

ரோயாவும் - விதுரஸகுரா - வஸிமதம் - ஸகமம் - கஷ்டவ்ரிதுகவீஜம் - நிதயம் - கரோதிகரொயி - வ்ராகயதி நிவஸநம் - தஸ்கயிதவ் - வ்யாவகம் -

IN13123-042 01/02/2010 © Institut Français de Pondichéry ifpindia.org

அ - காயஸ்ரீ விதவ்ருகாஸாஸ் - சுவிஸ் - சுஸிவகாஸ்.
தோஹகம் - ஸ்வாவகாமே - ஸவ-ஸ்ரீ-தாவாஹம் - வை
வம் - வாஸ் - சுவி - அ - ஹிதம் - காரணம் - மொ
யகம் - தஸ்.

(இதன்பொருள்.)

| | |
|---|---|
| மாயாவ்ய | மாயையென்னும் பெயருள்ள பாச மானது |
| விதஸ்ருதா | அநேகவித வல்லமையோடு |
| விஸிதம் | கூடினதாயும், |
| சுகமம் | சூக்ஷ்மரூபமாயும், |
| கஷவஸ்ரீதஸ்ருக ஸ்ரீஜம் | அசுத்தமார்க்கத்திற்கு முக்ய உபா தாநகாரணமாயும், |
| நிதவ் | ஆதலால் நித்யமாயும், |
| கோஸ்ரீஸ்ரொயி | கர்மாதிகார மிருக்கிற வரையிலும் பந்தகமாயும், |
| ஸகர்ஜி நிவஸ நம் | தன்கார்யங்கட்கு காரணமாயும், |
| தஸ்கர்ஜிதஸ் | அந்தக் கார்யங்கட்கு |
| வ்யாவகஸ்து | வ்யாபகமாயும், |
| காயஸ்ரீ விதவ் காரஸாஸ் | அதன்கார்யங்களான தத்துகரண புவநாதிகளில் அசேதநத்வம் ப்ர காசமாயிருப்பதால் |
| சுவிஸ் | தானும் சேதநமாயும், |



| | |
|---|---|
| சுவிவகாஸ் | அஞ்ஞானத்தைச் செய்வதாயும், |
| தோஹகஸ் | ஆதலால் மயக்குவதாயும், |
| ஸ்வாவகாமே | ஸம்ஹாரகாலத்தில் |
| ஸவ-ஸ்ரீ-தாவாஹம் | சகலப் ப்ரளயாகலராகிய வெல்லா ஆன்மாக்கட்கும் வாசஸ்தாநமா யுமிருக்கும். |
| வாஸ்வீச | மேலான விந்துவென்னும் பெய ருள்ள மஹாமாயையும் |
| வாவம் | இப்படிச் சொல்லிப்போந்த லக்ஷ ணமெல்லா முடையதாகும். |
| சுவி (தஸ்) | ஆனால் |
| தஸ் | அந்த மஹாமாயையானது |
| ஹிதம் | சுத்த ஸ்வரூபமாயும், |
| காரணம் | சுத்தாத்வாவிற் குபாதாநகாரண மாயும் |
| மொயகம் | ஸர்வவிஷய ஞானதிகளைப் ப்ரகா சிப்பதாயு மிருக்கும். |

தாத்பரியம்.

அசுத்தமார்க்கத்திற் குபாதாநகாரணமென்றது கலாதத்வங்களிலிருக்கும் புவநரூபமாயும், புவநஜ சரீரரூபமாயும், இப்படி யிருவகையாயிருக்கும் சகல ஜகத்திற்கு முபாதாந காரணமென்றதாம். உபாதாந காரணமின்றி ஜகத் உண்டாகமாட்டாதாகையால் முக்யோபாதாந காரணமென்று சொல்லப்பட்டது.

லோகத்தில் கடபடாதிகளாயிய மநேகமாய்ச் சேதநமாயிருப் பதால் உத்பத்தி நாசமுள்ளதாகக் காணப்பட்டிருக்கிறது. இ ந்த மாயை அசேதநமாயிருந்தும் பிறப்பிறப்பில்லாம லுபாதா காரணமாயிருப்பதால் ஏகமென்று சொல்லப்பட்டது. அசே தந மநேகமாகில் அநித்ய மென்பது கருத்து.

மாயையென்று மூபாதாந மநேகமென்று கொள்வோம். உபாதாநமொன்று யிருக்க வேண்டுமென்னும் நியம மேதிற்கு? உலகத்தில் அநேக ஜாற்களாகிய வுபாதாநகாரணத்திலிருந்து படமாகிய காரியம் பிறக்கக் கண்டிருக்கிறோம். அப்படியே ஸக லஜகத்து மநேக உபாதாநகாரணத்திலிருந்து பிறக்கட்டுமென் னில்? உத்தரம்.

படத்திற் குபாதாநகாரணமாகிய தந்துக்க ளநேகமாயிரு ந்தபோதிலும் தந்துத்வ ஜாதியரல் ஒன்றாகும். ஒரு பஞ்சிலிரு ந்தான த்ரவ்யமானதால் அப்படியே மாயையாகிய ஒரே உபாதாநகாரணத்திலிருந்து ஜகத்தண்டாகுமென்பது சித்தம்.

அநேகவிதங்களான புவநாதிகளே யுண்டாகுகின்றமை யால் அநேக சக்தியுள்ள தென்னப்படுகின்றது.

சிவனைபு மானமாவையும்போல மஹாஸம்ஹாரத்திலும் மா யைக்கழிவினமையால் நித்யமென்றது. அப்படியே மேலே சொல் லப்போகிறார்.

மாயை அநித்யமாதலால் ஜகத்துப் பிறக்கமாட்டாது. ஏனெனில்? மஹாசம்ஹாரத்தில் மாயையு மழியும்போது மறு படி ஸ்ருஷ்டி யாரம்பத்தில் எந்த வுபாதாநத்திலிருந்து ஜகத் தண்டாகும். வேறுவிதத்தில் ஜகத் திற்பத்தி முடியாமையால் மாயை நித்யமென்று கொள்ளவேண்டியதே.



உபாதாநின்மையால் ஜகத் தில்லையென்று மாயையை நித் யமாகக் கொள்ளவேண்டியதில்லை. ஸ்ருஷ்டிகர்த்தாவான ஈஸ்வ ரனே ஸ்ருஷ்டியாதிகாலத்தில் தம து வல்லமையா லுபாதாந காரணத்தை யுண்டாக்குகிறானில்லையோ? அது கூடாது. உபா தாநகாரணமு முபாதாநமினறி யுண்டாகாது; அதற்கொரு உபா தாநம் வேண்டும். இப்படி முடிவில்லாமை நேரிடும். ஆதலால், சம்ஹாரகாலத்திலும் சக்திரூபமாய் மாயையிருப்பதால் நித்யமே யென்பது கருத்து.

கருமங்களுக் கதிகாரமாவது பலங்கொடுத்தலாகும். மண் முதலான வுபாதாநகாரணமானது சக்ரமுதலான நிமித்தகார ணத்தை வேண்டுவதுபோல, மாயையாகிய வுபாதாநமும் கரும மாகிய நிமித்தகாரணத்தை வேண்டுமென்று கருத்து. ஆதலால் கர்மாதிகாரம்வரையில் மாயை பந்தகமென்றது.

மாயையின் காரியம் வெளியில் ப்ரசரிப்பதால் பாஹ்யமென் றும், உள்ளடங்கியிருப்பதால் ஆப்யந்தரமென்று மிருவகையாம். அவற்றுள் ஸ்ருஷ்டிகாலத்தில் கலாதித்வங்களிலிருக்கும் புவ நாதிரூபமாக வெளியில் ப்ரசரித்திருப்பது பாஹ்யமாகும். ஸம் ஹாரகாலத்தில் மாயாகர்ப்பத்தில் சூக்ஷுமரூபமா யடங்கியிருப் பது ஆப்யந்தரமாகும்.

மாயை தன்காரியங்களே வ்யாபியாவிடில் புவநாதிரூபமா கக் காரியங்களெல்லாமுண்டாகமாட்டாது. ஆகையால் மாயை வ்யாபகமென்று கொள்ளவேண்டும்.

சைதந்யரூபமான ஆன்மாவிலிருந்தே சேதநா சேதநங்கள் தோற்றி மறையுமென்னும் பக்ஷத்தை மறுக்கும்பொருட்டுக் கா ர்ய மசேதநமாதலால் மாயை அசேதநமெனறார்.

கடமுதலான அசேதநங்களுக் குபாதாநகாரணமாக மண் ணும் அசேதநமாகக் காணப்பட்டிருக்கிறதே. அப்படியே அசே



IN13123-044 01/02/2010 © Institut Français de Pondichéry ifpindia.org

தங்ஸ்ளான புவநாதிகளுக் ஞாநாநமாகிய மாயையு மசேதந மேமெனபது சித்தம்.

சேதநத்திலிருந்து அசேதநம் பிறக்கட்டுமே! ஏதுக்கிந்த வேற்பாடென்னில்? அது கூடாது. இந்த ஏற்பாடில்லாவிடில் அத்தண்மை யில்லாதவற்றிலிருந்து அத்தண்மையுள்ளது பிறக்கவும், அத்தண்மையுள்ளதில் அத்தண்மையில்லாதது பிறக்கவும், இப்படியெல்லாவற்றிலு மிருந்து எல்லாம் பிறக்கும்படிவரும். அக்நியைக்காட்டும் புகையைக்கொண்டி ஜலத்தையறுமிகரும் படி நேரிடும். ஆதலால் வேறுகாரணத்தில் வேறுகாரிய மொரு போதம் பிறக்காதென்று சேதநத்திலிருந்து அசேதநோற்பத்தி நிஷேதிக்கப்பட்டது.

சிவம் ஞானரூபம். அதற்கு வேறுபட்டது அசிவம் - அஞ் ஞானம். அதைச்செய்வது மாயை. ஆதலால் மோஹமாகும்.

மாயை, தானே பந்தமாகமாட்டாது. கலாதிகளின் வழி யாய்ப் பந்தமாகும். பின்னும், ஞானத்தை ப்ரகாசிப்பிக்குமெ னறு சொல்லியிருக்க எப்படியது மோஹமாகுமென்னில்? உண் மை. மாயைபாலுண்டான ஞானம் கிஞ்சித்விஷயமாய் அநான் மாவான சரீராதியில் ஆன்மபாவனையை யுண்டாக்குவதால் மோ ஹமென்றது. அக்காரத்தில் தீபம் ப்ரகாசித்தபோதிலும் கரு நெய்தல் முதலானவற்றில் செங்கழுநீரென்னும் விபரீதஞானத் தை யுண்டாக்கும். அப்படியே மாயையில் ஞானம் ப்ரகாசித்த போதிலும் அநான்மாவான சரீராதியில் ஆன்மாவென்னும் விப ரீத ஞானத்தை யுண்டாக்குகின்றமையால் மோஹமெனபது சித் தமேயென்று கருத்த.

இப்படி மாய லக்ஷணங்கூறி வித்யாலக்ஷணங் கூறுகின் றார். வநவம்பாம் எனறார். ஆணவ மாயைக்கும் வித்யைக்கு முள்ள பேதந் தெரியும்படி வித்யாவைபவகம் என்றார். சப்



தந்தை யுண்டாக்கி யதன்வழிமாகச் சிவமூதலான சுத்தவஸ் துக்களைக் காட்டுகின்றமையால், வைபவகம் என்றது மாயையைப்போல் மோஹமல்லவென்று ஆகமங்களில் ப்ரசித்த மாயிருக்கிறது.

பலவித சக்தியுள்ளதென்றும் சூக்குமமென்றும் நித்யமெ ன்றஞ் சொன்ன லக்ஷணம் மாயைக்கும் வித்தைக்குஞ் சரியே! ஆனால் வித்தை மஹாதிகாரம்வரையில் தடுக்கின்றது. இங்கே பா ஸ்மகார்யம் சக்திமுதல் சுத்தவித்தைவரையி லிருக்கும் புவநா நியம். ஆட்யக்தரகார்யம் சம்ஹாரகாலத்தி லவை விந்துரூப மான சிவதத்வத்தில் சூக்குமரூபமா யடங்கியிருப்பதாம். பின் னும் தனது பரிணமங்களாகிய சாக்தியதிதை முதலான பஞ்ச கலைகளிலும் சுத்தாத்வாவாகிய ஜகத்தை வ்யாபித்திருக்கும். இன் கார்யமும் ஜடமாதலா லிதுவும் ஜடமே. ஸம்ஹார கா லத்தில் மந்த்ரர் மந்த்ரேஸ்வரர் அநந்தாதிகள் இவர்களுக்கு வாசல்தானமாகும். என் றிப்படி யுள்ளிட்டபேத மூஹித் தறிய வேண்டும். (அ)

அவதாரிகை.

இப்படி மலமூதலான பாசங்களின் ஸ்வரூபத்தைச் சொ ல்லி, மேல் விஞ்ஞானகலர் முதலான ஆண்மாக்கள் மந்த்ர மந்த்ரேஸ்வரர் இவர்களுக்குப் போகமோக்ஷ நிமித்தம் பர சிவரூலே ஸ்ருஷ்டிக்கப்பட்ட சிவதத்வமுதலான மூப்பத் தாறு தத்வங்களையுஞ் சொல்லுகிறார்.

க — ஸ்ரோகம்.

உதிதாமாவகிதகூம வ்ருஸரகிச விஹாஸஸ்
கமாத்யம் விஸுத்திக்ஷாவிஸ்தரோ வ்யாஹ்ருதிபா

ஹ்ராம் ஸுஜ்ஞ யிகூ ஹ்ரீம் ஸுஹ்ரௌவ்ருதகூம்ழி
கூயிகெரு மெஸுதகூம் ஹந்வெகி ஸஹிதம் தகு
கிரியா ஸக்தியொமாகு ஜாநாவ்ரு ஸக்தியொமாகு
நம் நிவஹேஸ்வெ ஸுஸுவிஹ்ரீவ்ருதகூம்ழி ॥ *

வ ஹ் மெ ஹ் ழி.

உஹ்ரீமாகு - ஸக்திதகூம் - வ்ரஹாகி - அ.
விஹோழு - தகு - கூமாஜ்ரம் - விஸ்ரூகெஷோழு - வி
ந்ரோழு - வ்ராகீ - ஹ்ரீக்ரியாஹ்ராம் ஸுஜ்ஞம் - கூயி
கூகாகு - யகு - ஸம்ஹ்ரௌவ்ருதகூம் - கூயிகெரு -
மெஸுதகூம் - ஹந்வெகி - ஸஹிதம் - தகு - கிரியா
ஸக்தியொமாகு - ஜாநாவ்ரு ஸக்தியொமாகு - ஹந்
நிவஹேஸ்வெ - ஸுஸுவிஹ்ரீவ்ருதகூம்ழி. *

(இதன் பொருள்.)

விஸ்ரூகெஷோழு — ஜகத்தை ஸ்ருஷ்டிக்க இச்சையுள்ள
விஹோழு — பரமசிவனுடைய
உஹ்ரீமாகு — வ்யாபாரத்திலே
வி ந்ரோழு — விந்து வெல்லும் சிவதத்வத்திலி
ருந்து
வ்ராகீ — முதலிலே
கூமாஜ்ரம் — சாந்தி கலையினாலும் புவனங்களின
னும் நிறைந்த



தகு — ப்ரசித்தமான
ஸக்திதகூம் — சக்திதத்வமானது
வ்ரஹாகி — உண்டாகின்றது.
கூயிகெரு — ஸ்ருஷ்டாவாயதிகாரத்தைபுடைய
விஹோழு — அந்தப் பரமேஸ்வரனிடத்தினின்
றும்
ஹ்ரீக்ரியாஹ்ராம் — ஞானக்கிரியைகளினாலே
ஸுஜ்ஞம் — சமானமாயிருக்கின்ற
ஸம்ஹ்ரௌவ்ருத கூம் — சதாசிவதத்வமென்பது
யகு — யாதொன்றுண்டோ
தகுவ்ரஹாகி — அது உண்டாகின்றது.
கூயிகெரு — மிகுதியாக
கிரியாஸக்தி யொமாகு — க்ரியாசக்தி சம்பந்தத்தினாலே
ஹந்வெகி — மந்த்ரேஸ்வரரான அநந்தாதிக
ளோடு
ஸஹிதம் — கூடிய
மெஸுதகூம் — ஈஸ்வரதத்வமானது
வ்ரஹாகி — உண்டாகின்றது.
கூயிகெரு — மிகுதியாக
ஜாநாவ்ரு ஸக்தி யொமாகு — ஞானசக்தி சம்பந்தத்தினாலே

IN13123-046 01/02/2010 © Institut Français de Pondichéry ifpindia.org

ஓநமஃ சிவஹரீம் சப்தகோடி மஹாமந்த்ரர் முதலா
வெஸ்ஹி னவரோடு கூடிய
கம்

ஸஃஐவிஜ்ஞாவை சுத்த வித்தையென்னும் தத்வமா
கஸ்ரம் னது
வ்ரஹாஸ்ரீ உண்டாகின்றது.

தாத்பரியம்.

விந்துவானது போகாதிகார தசையைவிட்டுத் தன்காரிய ங்களெல்லாவற்றையுந் தனக்குள் ளடக்கிக்கொண்டிருக்கும் போது, விந்துவைக்கடந்து கேவல சித்ரூபியா யிருக்கின்ற சிவ னே லயரூபமான சிவதத்வமென்னும் பெயரை யடைகின்றார். அப்போது சமவாய சம்பந்தமா யிருக்கின்ற சிற்சக்தியானது உபாதானரூபையா யிருக்கின்றது. சிவனுக்குக் காரியத்தில் வி ருப்பின்மையால் விந்து அசேதனமானதால் அதற் கதிஷ்டாந பூதையாய்ச் சிவசமவேதையா யிருக்குஞ் சக்தியொன்றே லய மென்னும் பெயரையடைகின்றது. அந்த லயசக்தி சம்பந்தத் தினாலே ஒருவராகிய சிவனும் லயரென்னும் பெயரை யடை கிறார். அவரெப்போது காரியத்தில் லதிகரிக்கிறாரோ அப்போது சக்தியும் காரியத்தில் அதிகரிக்கின்றது. அவருக்கு ஸ்ருஷ்டியாதி க்ருத்யத்தைச் செய்ய இச்சை யெப்போ தண்டாகின்றதோ அப் போது ஸ்ருஷ்டியாதி க்ருத்யத்திற்குக் காரணமாகிய சக்தியே யுபாதானமாகிய விந்துவிற் கதிஷ்டான பூதையாய்த் தன்காரியத் தைச் செய்கிறது என்னுங் ரூபத்தினாலங்க ஸ்ருஷ்டிக்க இச்சை கொண்ட விபுவென்றது.

விந்துவானது தன்காரியங்களைத் தனக்குள் ளடக்கிக் கொண்டிருக்கும்போது, லயதத்வமென்றும் சிவதத்வமென்



றும் சொல்லப்படும். ஆதலால் முத லுபாதானமான விந்துவை சிவதத்வமென்றது. இந்த விந்துவின் பரிணமமாகச் சக்தி தத்வ முண்டாயிற்று. இந்தவிந்து மூதலாதாரமாதலால் முழுதும் கூறப்பிக்கப்படுகிறதில்லை. எங்கே கூறப்பிக்கப்படுகிறதோ அத்விடம் சாந்தியதீதகலையாகும். சாந்திமூதலான புவநரூப மான விந்துவின் பரிணமமே சிவதத்வமெனனப்படும். சிவதத்வ மெனறும் பெயருள்ள சாந்தியதீத புவநம் சாந்திகலா மஸ்த கத்தி லிருக்குமென்பர்.

சக்தித்வத்தைச் சேர்ந் தண்டாவது சதாசிவ தத்வம். தத உபாதானமான விந்துவினது ஞானக்ரியா சமமான இரண் டாவது பரிணமம்.

இவ்விடத்தில் சதாசிவமூதலான தத்வக்கூட்டமானது ஸ்ஜ்ஞ - ஸ்ஜ்ஞ்ர் என்று இருவகையாம். ஆதியில் தாமே சதாசிவமூதலான தத்வநாமதேயத்தை யடைந்த சக்திசிவ மிரு வருமே ஸ்ஜ்ஞ மென்னப்படுவர். மூப்பத்தாறு தத்வங்க ளுக்குட்பட்ட புவநாதியோடுகூடிய தாத்விக சமூஹமே ஸ்ஜ்ஞ்ர் மெனனப்படும்.

அதில் ஸ்ஜ்ஞ மென்பது, ஸ்ருஷ்டிக்கப்படுஞ் சதாசிவ மூதலான தத்வவிஷய வ்யாபாரமாகிற வுபாதிபேதத்தால் பே தீக்கப்பட்டுச் சிவனது அவஸ்தையாய்ப் போகாதிகாரரூபமான சதாசிவாதி தத்வக்கூட்ட மாகுமென்று கருத்து. இது சக்தி வ்யாபாரமாகிய வுபாதிபேதத்தால் கற்பிதமான பேதமுடைமை யாலும் பாரமார்த்திகமாகப் பேதமின்மையாலும் இந்த ஸ்ருஷ் டரூபமான சதாசிவாதி தத்வக்கூட்டத்திற் குபாதானம் வேண் டியதில்லை.

ஸ்ஜ்ஞ்ர் மென்பது, சதாசிவாதி தத்வங்களில் யோஜிக்கப்

IN13123-047 01/02/2010 © Institut Français de Pondichéry ifpindia.org

பட்ட அணுக்களுக்குப் போகபூமியாக ஸ்ருஷ்டிக்கப்படுஞ் செய்கையா யிருக்கும். ஆதலா லவ்கேயுபாதானம் வேண்டும்.

மூலி லயபாதியால் வந்த சதாசிவமுதலான மூன்றவஸ்தை யுள்ள சிவன் கர்த்தா, அவரது சக்தியே கரணம், விந்துசக்தி யேயுபாதானம்; என்றுல் சதாசிவமுதலான தத்வ தாத்விக வி ஷயமான ஸ்ருஷ்டி யிச்சையுள்ள பகவானுக்கு அதைச் செய்து நிமித்தம் வ்யாபாரமுண்டாகிறது. அது ஞானக்கிரியா சக்தி களின் சரிப்பங்காயிருக்கும். அந்த வ்யாபாரபேதமாகிய வுபா தியினுலே அந்தப் பரமேஸ்வரர் போகதத்வம் சதாசிவதத்வம் என்று சொல்லப்படுகிறரென்று கருத்து. அந்தப் பெயர் பெற்ற பரமேஸ்வரர் சதாசிவாதி தத்வதாத்விகங்களே விந்துசக்தி யாற் செய்கிறர். அந்தச்செய்கை, ஞானமும் க்ரியையுங் கூடிப் ப்ரகாசித்த வ்யாபாரமாகும்.

ஞானசக்தியடங்கி க்ரியாசக்தி மிகுத்துண்டானது ஈஸ்வர தத்வம் இவ்விடத்திலும் ஸ்ருஷ்டியாதி காரியங்களில் கரியை மேலிடும்போது அந்த வ்யாபாரமாகிய வுபாதியுள்ள சிவனே அதிகாரதத்வம் ஈஸ்வரதத்வமென்று சொல்லப்படுகிறர். அந்தப் பெயர்பெற்ற பரமேஸ்வரர், ஈஸ்வர தத்வதாத்விகங்களே விந்துசக்தியாற் செய்கிறர். அந்தச் செய்கை க்ரியாசக்தி வ்யா பாரமாகும்.

இப்படி ஸ்ருஷ்டிக்கப்பட்ட இந்த ஸதாசிவாதி தத்வ தாத்விகங்களேயும் அங்கிருக்கு மனுஷ்யசங்கத்தையும் ஸ்திதிமு தலான வ்யாபாரத்திலுலே பாலனஞ்செய்கிறரென்பதைக் காட்டுகிறர். ஜாநாவ்யா வஸ்தியாமாஸ் என்று அந்த பாலநமிகுந்த ஞானரூபமாகும். இவ்விடத்திலும் ஸ்ருஷ்டி த்த காரியங்களேப் பாலனஞ்செய்வதில் ஞான மிகுதியாமெ



ன்பது காரிய முகத்தாலே சித்தமாகும். அந்த வ்யாபாரமா யிய உபாதியுள்ள சிவன், ஸ்ருஷ்டிகார தத்வமென்றும் வித் யாதத்வமென்றும் சொல்லப்படுகிறர். இந்தப் பெயருள்ள சிவன், வித்யாதத்வ தாத்விகங்களே விந்துசக்தியாலே செய் கிறர்.

இப்படி ஸ்ரஷ்டா ரூபமான உபாதியால் வந்த போகா காரமாமுள்ள சிவனது அவஸ்தாபேதமாகிய சதாசிவா திகார காமமுள்ள தத்வங்களிலிருக்கும் விஞ் ஞானகலருக்கும், மந்தரர் மந்தரேஸ்வரருக்கும், பலவித மான புவநங்களேயும் ஸ்வபாவ சௌந்தர்யமுள்ள ஸ்தரீக ளேயும், வாட்டமில்லாத போகங்களேயும், தநுகரணங்களே யும், பரமேஸ்வரர் தம்மிடத்தில் சமரீதையான ஞானக் கிரியாசத்திகளாற் செய்கிறர் என் முகமங்களிற் சொல்லியி ருக்கிறது. (சு)

அவதாரிகை.

இக்கப்பிரகாரம் சுத்தங்களான ஐந்து தத்வங்களேயுஞ் சொல்லி, மேல் அசுத்தங்களான கலாமுதலான தத்வங்களேச் சொல்லுகிறர்.

கஎ—ஸ்லோகழி.

ஶாயாதொ நஞ்சியாமாஸ் வுஸுகீய கலா காலுதகூ நிய தூ வித்யா ராழு கலாதூ வுகூகி ஸவதிதொ ஸுத்ய—ழுராண ஶவாஸ்। வை—ஜிஸ்ரா தொ வுஹஜ்ஜ கியமஸ்ய—கா யதிஸ்யெ ஶுா

IN13123-048 01/02/2010 © Institut Français de Pondichéry ifpindia.org

நமம் ப்ராகீ கூடி-ராகூர்மிணீவ ஸாதராய் ஸமஸ்த மதஹிதாய் வஞ்சஹஸ்தாபி தாஹ்ருதே ॥

## வ்ருத்தி.

ஸாயாதய் - சாஞ்சியாமாஸ் - ப்ரஸ்ருதி - ஸ. கமா - காலதகூம் - நியதயா - விஜ்ஞா - ராகாய் - கலா - தய்-ப்ரகிருதிஹவம் - ஹதய் - ஸர்க்ஷயாக் - மரணம். சுஹாஸ் - வைலிய்-ஸ்ருதய் - சுவி-சுஹம்காரஸ் - த்ரிவி யமஸ்ஸயஸ்தா - யீந்த்ரியை-ஸ்ருமம் - ப்ராக்-கரா ணாணி - வவ-ஸாதராய் - ஸமஸ்த மதஹிதாய் - வஞ்ச ஹஸ்தாபி - தாஹ்ருதே.

(இதன் பொருள்.)

| | |
|---|---|
| ஸாயாதய் | அசுத்த தத்வோபாதான காரண |
| சாஞ்சியாமாஸ | மான மாயையினின்றும் |
| | அசுத்தாத்வ கர்த்தாவான அந்த |
| | தேஸ்வர ருடைய நியோகத்தி |
| கமா | னாலே |
| காலதகூம் | கலாதத்வமும் |
| நியதயா | காலதத்வமும் |
| ப்ரஸ்ருதி | நியதித்வத்தோடு |
| கமாதய் | உண்டாகின்றது. |
| | இந்தக் கலாதத்வத்திலிருந்து |



| | |
|---|---|
| விஜ்ஞா | வித்யாதத்வமும் |
| ராகாய் | ராகதத்வமும் |
| ப்ரஸ்ருதி | உண்டாகின்றது. |
| (தய்) | பின்பு முன்சொன்ன மாயையிலி |
| | ருந்து |
| ஸர்க்ஷயாக் | புவநாத்வாவில் ருத்ரர்களுக்கா |
| | தாரமாகிய |
| ப்ரகிருதிஹவம் | ப்ரகிருதித்வ சகாயமான புருஷ |
| | தத்வமானது |
| ப்ரஸ்ருதி | உண்டாகின்றது. |
| ஹதய் | பின்பிந்தக் கலாதத்வத்திலிருந்து |
| ப்ரகிருதிஹ் | ப்ரகிருதித்வம் |
| ப்ரஸ்ருதி | உண்டாகின்றது. |
| சுஹாஸ் | இந்தப் பிரகிருதித்வத்திலிருந்து |
| மரணம் | சத்வம் ரஜஸ் தமஸ் என்னும் குண |
| | தத்வமானது |
| ப்ரஸ்ருதி | உண்டாகின்றது. [து |
| (த்ரிஹ்ய) தய் | பின்னுமிந்தக் குணதத்வத்திலிருந் |
| வைலிய் | புத்திதத்வம் |
| ப்ரஸ்ருதி | உண்டாகின்றது. |
| ஸ்ருதய் | இந்தப் புத்திதத்வத்திலிருந்து |
| த்ரிவியமஸ் | மூன்று விதங்களாய் ஸத்வாதிகு |
| ஸ்தா | ணங்களோடு கூடிய |

IN13123-049 01/02/2010 © Institut Français de Pondichéry ifpindia.org

அஹங்கார தத்வ முண்டாகின்றது.

இந்த மூன்றுவிதமான அஹங்கார த்திலிருந்து

மூக்கல் ஸாத்விக அலங்கார த்தில் ஞானேந்திரியங்களோடு

மனஸ்தத்வ முண்டாகின்றது.

கன்மேந்திரியங்கள் இரண்டாவது ராஜஸ அஹங்காரத்திலிருந்து முண்டாகின்றன.

மூன்றாவது தாமஸ அஹங்காரத்திலிருந்து தன்மாத்ரைகளுண்டாகின்றன.

இவை தத்தம் ஸ்தூலாகாசங்களான ஸப்தாதி குணங்களையடைந்த பேதங்களையுடையவைகளாகும்.

அந்தச் சூக்ஷ்மங்களான பஞ்சதன் மாத்ரைகளினின்றும்

ஆகாசமுதலான ஐந்து பூதங்களுமுண்டாகின்றன.

தாத்பரியம்.

சுருதியாகாசே என்றதால் அகத்தீஸ்வரர் ஆன்மாக்களுடைய கன்மங்கள் ப்ரளயத்தில் பக்குவமானவற்றை யறிந்து தமது சக்தியால் நிஷ்டிக்கப்பட்ட வேகசக்தியி



னாலே மாயையை க்ஷோபித்து கலாதித்வங்களைப் பெறும் படிச் செய்கிறாரென்று தெரிவிக்கப்பட்டது. இப்படி மாயையை க்ஷோபித்து தத்தையதிஷ்டித்து ப்ரளயாகலர் சகலர் இவர்களுக்கு வெவ்வேறான சூக்ஷ்ம ஸ்தூல சரீரங்களையும் புவநாதிகளையும் ஸ்ருஷ்டிக்கிறார்.

நியதித்வத்தோடென்றதனால் கலை காலம் நியதி இம் மூன்று தத்வமும் மாயையிலிருந்துண்டானவையென்று கருத்து.

மஹேச்வரர் கலையை தமதுசக்தியால் க்ஷோபித்துப் பெறும்படிச் செய்த வித்தை ராகம் இரண்டு தத்வங்களையுமுண்டாக்குகிறதென்று கணாதி என்றது.

இத்தப்படி மாயையிலிருந்து கலைமுதல் ராகம் வரையில் தத்வமைந்து முண்டானபின், ஆன்மா இவற்றைப்பற்றி பஞ்சகஞ்சுகதனுய்ப் புருஷனானதனால் புருஷதத்வ முண்டாயிற்றென்று தத்தி வ்ருத்திவஹ: என்றார். இத்தப் புருஷதத்வமானது மாயையிலிருந்துண்டாய் ப்ரகிருதி முதலான தத்வங்களை வ்யாபித்துக் கொண்டு புவநாத்வாவில் வாமதேவர் முதலான ருத்ரருக்கு ஆச்ரயமாயிருக்கும் புருஷனாய், போகாதிகாரியகர்த்தாவாகும்போது ப்ரகிருதி வேண்டியிருப்பதால் ப்ரகிருதி புருஷனென்று ப்ரஸித்தராவார். ஆதலால் வ்ருத்திவஹ: என்றது.

புருஷன் சிவனைப்போல் சேதநனானதால் அசேதநங்களாகிய தத்வங்களின் அத்வாவாக எண்ணுவது தகாது என்னில்? உண்மை. ஆனால் கலை முதலான ஐந்து தத்வங்களாலும் கட்டப்பட்டு ஆன்மாவானவன் போக்த்தாவாய்ப் புருஷனென்றமையால் புருஷதத்வமென்று பெயரிடப்பட்டது.

பரமார்த்தமாகப் புருஷன் அத்வாவமல்லன். புவநாதாரமுமல்லன்; ஆகையாலேயே புருஷதத்வ புவனங்கள் ராகதத்வத்திலிருக்கின்றனவென் ரூமமங்களிற் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆதலால் நிர்வாணதிக்ஷையில் ப்ரகிருதி தத்வசுத்தி யானபின பும்ஸத்வ மலசுத்தி நிமித்தம் ப்ரகிருதிக்குமேல் ராகதத்வத்திற்குக் கீழ் புருஷதத்வஞ் சொல்லப்பட்டிருக்கிறது

மேல் குணமூலமான தத்வங்களுக் குபாதான காரணமான ப்ரகிருதிதத்வமானது கலையிலிருக் தண்டாயிற்றென்று ஹரி வ்ருத்தி யென்ரூர். பினபு ப்ரகிருதி தத்வத்தைக் கலாதத்வத்திலிருக் தண்டாக்கினூர். அது சப்தக்ரக்திக் காதாரம் குணதத்வ காரணமென்றும்ருகேக்திரத்திற் சொல்லியிருக்கிறது. சப்தக்ரக்தியாவது, மஹத் - அஹங்காரம்-தன்மாத்ரை ஐக்த-ஆக இவ்வேழும் சப்தக்ரக்தி. இவற்றிற் காதாரம் ப்ரக்ருதியெனறு நாராயணகண்டர் உரையிட்டிருக்கினூர்.

குணதத்வம் அவ்யக்தமென்னும் ப்ரகிருதியி லுண்டானது, சத்வம் ரஜஸ் தமஸ எல்று குணம் மூனறு. அவை முறையே ப்ரகாசமாயும் வ்யாபாரமாயும் மூடமாயுமிருக்கும். அவற்றின் ரெழில் முறையே சுகம் அக்கம் மோஹமாகும்.

இந்தக் குணதத்வத்திலிருந்து புத்திதத்வ முண்டாயிற்று. அதவும் மூக்குண ரூபமாயிருக்கும். முன்செய்த வினைக்குத் தக்கபடி குணங்களாலே மூன்ரவிதமாய் விஷய நிச்சயஞ் செய்துகொண்டிருக்கும்.

புத்தி தத்வத்திலிருந் தண்டான அஹங்கார தத்வமானது மூன்று குணங்களிரூலே முறையே தைஜலம் வைகாரிகம் பூதாதியென்னும் பெயர்களையுடையதாகும். அவற்றுள்



தைஜஸம்-ராத்விகம், வைகாரிகம் - ராஜஸம், பூதாதி-தாமலமாகும்.

ஸ்ரோத்ரம் த்வக்கு சக்ஷு ஜிஹ்வை நாசிகை மனஸ் இவை ஞானேந்திரியங்கள்; ப்ரகாச ரூபமாதலால் தைஜஸ பதமெனனும் ஸாத்விக அஹங்காரத்திற் பிறந்தன. வாக்கு பாணி உபஸ்தம் பாயு பாதம் இவை கன்மேந்திரியங்கள்; வ்யாபாரூபமாதலால் வைகாரிகமெனனும் ராஜஸ அஹங்காரத்திற் பிறந்தனவாகும்.

தன்மாத்ரைகளாவன? சூக்குமங்களாகிய சப்த ஸ்பரிஸ ரூப ரஸ கந்தங்களாகும். ஸ்தூல சப்தாதிகள் இவற்றின் பேதங்களாகும். இவை பூதாதியெனனும் தாமஸ அஹங்காரத்திற் பிறந்தனவாகும். இவை பூத சூக்குமங்களாதலால் இவற்றிலிருந்து ஆகாஸாதி ஸ்தூல பூதங்கள பிறந்தனவென்ற வாறு. (கo)

அவதாரிகை.

இப்படி மூப்பத்தாறு தத்வங்களி னுற்பத்தியையுக் தெரிவித்தமேலங்குள்ள ஆகத்தாதிகளின் ஸ்வரூபத்தைச் சொல்லுகிரூர்.

கக — ஸ்லோகம்.

ஜாநாஸி கெவலிஷ்ட வ்ரிதேஷ்ட வரதோ
மூர்தெரஸ்ரகாம் ரிதிதீரு ஜ்ஞாணாம் ஜவாகியாம
வஜ்ரா நஞ்ரா ரிவாநூ ரு-ரரிரு கரகா
ரூவையே ரூ-ளள வயகரூரு வஜ்ரூகா நீரூ
ரொ ரூ-ஜ்ராஸ்ரா வி வியாய ஜெஹவ-ரூமாரு ரி
ஷ்டாரியத்த ஹலெ ॥ *

IN13123-051 01/02/2010 © Institut Français de Pondichéry ifpindia.org

## வஜ்ரபஞ்ஜரம்.

ஜாக்ரத்ஸ்வப்னஸுஷுப்தி-துரீயாவஸ்தாஸு மநோவாகாயைர்யத்க்ருதம் பாபம் தத்ஸர்வம் விநச்யது. ஸ்ரீபஞ்சாக்ஷரமந்த்ரஜபேந ஸர்வபாபக்ஷயோ பவது. ஸர்வபாபக்ஷயாத் ஸர்வதேவப்ரஸாதாத் ஸர்வஸித்திர்பவது. ஸர்வஸித்திப்ரஸாதாத் ஸர்வே மநோரதாஸ்ஸம்பூர்ணா பவந்து. ஸர்வமங்களம் பவது. ஸர்வே ஜநாஸ்ஸுகிநோ பவந்து. ஸர்வே ஜநாஸ்ஸுகிநோ பவந்து. ஸர்வே ஜநாஸ்ஸுகிநோ பவந்து.

(இதன்பொருள்.)

| | |
|---|---|
| ஸிவஸ் | சதாசிவரானவர் |
| ஸ்ரீபஞ்சாக்ஷரமந்த்ரஸ் | மாயைக்குமேல் |
| ஸ்ரிதேஷு | இருக்கின்ற |
| ஜாக்ரத்ஸு | விஞ்ஞானத்தினாலே |
| ஸ்வப்நேஷு | கரும மாயாபந்த மிரண்டும் விட்டு நீங்கிய விஞ்ஞானகலர்கட்கு |
| காம்யேஷு | சிலர்களே |
| ஸுவாகயோம ஹ்ருதயாய | மலபரிபாகத்திற்குத் தக்கபடி |
| ஜ்ஞாநாம் வதீர்ய | மந்த்ரேஸ்வரர்களாகவும், |
| சாரயாய | வேறு சிலர்களே |



| | |
|---|---|
| ஜ்ஞாய | சப்தகோடி மஹா மந்த்ரர்களாகவும், |
| சாரயாய | அவர்களில் வேறு மூன்றரைக்கோடிப் பெயர்களே |
| மஹாய | குருக்களாகவும், |
| கரகா | செய்தி; |
| ஸுஷுப்தி | சுத்தாத்வாவில் |
| வியதி | வாசஞ்செய்யச் செய்கிறார். |
| ஸ்ரீபஞ்சாக்ஷரஸ் | அநந்தேஸ்வரரானவர் |
| சுத்தாயை | அசுத்தாத்வாவில் |
| ஸ்ரீகண்டாதிகாய | கலைமுதலானவற்றை இண்டாகிய சூக்ஷ்மதேஹமுள்ள |
| ப்ரளயாகலாய | ப்ரளயாகலர்களையும், |
| ஸ்ரீகண்டாவி | நூற்றுப்பதினெட்டிருத்ரர்களையும் |
| வியாய | ஸ்ருஷ்டித்து |
| தேஹவாஸாய | புரியஷ்டக தேஹமுள்ள |
| ஸிவாய | வேறு ப்ரம்ம விஷ்ணு முதலானவர்களே |
| ஹவே | கர்மானுகுணமாய் வரும் ஸம்ஸாரத்தில் |
| வியதி | புவநாதிபதிகளாகச் செய்கிறார். |



IN13123-052 01/02/2010 © Institut Français de Pondichéry ifpindia.org

தாத்பரியம்.

இவ்விடத்தில் ஸிவஸ் என்றது, ஸ்ருஷ்டி முதலான பஞ்ச க்ருத்ய வ்யாபாரவசத்தால் பஞ்சப்ரம்ம ஸம்பந்திகளான அஷ் டமூர்திம்சத் கலைகளோடு கூடிய சதாசிவதத்வத்திலிருக்கும் சதா சிவ பட்டாரகரைச் சொல்லியது.

சதாசிவதத்வத்திற்கு மேல் சக்திதத்வத்தில் சக்திமான் களுக்குப் பரனென்றும், சூக்ஷ்ம நிராலம்பமான சிவதத்வத்தில் த்வநிபதி யென்றும், பதிபேதம் சாஸ்த்ரங்களிற் சொல்லியிரு க்க; இங்கெப்படி சதாசிவதத்வத்திலிருக்கும் சதாசிவபட்டா ரகரைச் சிவனென்று சொல்லலா மென்னில்? க்ருத்ய பேதத்தி னாலே சக்திக்குப் பேதம்வந்ததுபோலப் பதிபேதமு முபசார மாகச் சொல்லப்படும்: பரமார்த்தமாகப் பேதமில்லை.

கருமபந்தம் மாயாபந்த மிரண்டையும் விட்டு நீங்கிய வீஞ் ஞான கேவலரான அநேக ஆன்மாக்கள் மாயைக்குமேல் சுத் தவித்தைக்குக் கீழ் ஆணவமலத்தினாலேமாத்ரம் மறைக்கப் பட்டவரா யிருக்கிறார்கள். அவர்களுக்குள்ளே விசேஷமாய் மலபரிபாகமுள்ள அநந்தாதிக ளெட்டுப்பெயர்களும் ஈஸ்வர தத்வத்தி லிருக்கிறார்கள். அவர்களின் பெயர்கள் அநந்தர் ஸூ க்ஷ்மர் சிவோத்தமர் ஏகநேத்ரர் ஏகருத்ரர் த்ரிமூர்த்தி ஸ்ரீகண் டர் சிகண்டி இவர்கள் அஷ்டவித்யேஸ்வரர்கள். வாமாதி சக் திகளோடு கூடினவர்கள் அதிகார மலமுள்ளவர், சுத்தாத் வாவி லீஸ்வரதத்வவாசிகள். இவர்களைக்காட்டிலும் தாரதம் யத்தாற் கொஞ்சங்குறைந்த மலபரிபாகமுள்ளவர் ஸப்தகோடி மஹாமந்திரர்கள் இவர்களுக்குப் பரிவாரங்கள். ஸப்தகோடி மஹாமந்திரர் சுத்தவித்யாதத்வ வாசிகள். சிற்சதத்வத்திலிருக் கிறவர்களுக்கு மேல்தத்வத்தி லிருக்கிறவர்கள் மேலானவர் கள். அவர்களிற் பாதி-நூ-கோடி பெயர் மலபரிபாக தார தம்யத்காலே குருக்களாயிருக்கிறார்கள். இவர்களை அதிகார மூர்த்தியில் பரமேஸ்வரர் குருமூர்த்தி யதிஷ்டானமன்றி நேரி டத்தாமே அநுக்ரஹம் பண்ணுகிறார். மற்றப்பாதி நூ-கோடி பெயர்களையும் மாயாத்வாவில் அதிகாரமுள்ளவர்களாகச் செ ய்த சம்ஹாரகாலத்தில் குருமூர்த்தியை யதிஷ்டித்து அநுக்ர ஹிக்கிறார்.

சுத்தாத்வாவில் சிவன் கர்த்தா. அசுத்தாத்வாவில் அநந் தேஸ்வரர் கர்த்தா. நூற்றுப்பதினெட்டு ருத்ரரும் ப்ரம்மாவி டரசுகர்கள். ப்ரம்ம விஷ்ணுவாதிகள் மலமுள்ளவர்கள். புருஷதிகள் கர்மாநுகுணமான சக்தியுள்ளவர்கள். இவர்களை அண்டமத்யத்தில் ஸ்ருஷ்டிக்கிறார். (கக)

அவதாரிகை.

சிவனிடத்தில் சமவாய சம்பந்தமா யிருக்கின்ற க்ரியாசக் தியே உபாதான காரணமான குண்டலினி சக்தியை யதிஷ்டி த்த அகிலாண்டான ஸமஸ்த ஜகத்தையுந் தரிக்கின்ற தென் றும் கருத்து விளங்கக் கூறுகின்றார்.

கஉ—ஸ்ரீஸ்ரீகழி.

ஸ்ருஷ்டி ஸ்ருதி நிதாந விநி- மிலிமை
ஸ்ருதி காலெயு ஜுமநாயிய நிஜநாதமாய கூ
ஸ்ரீயதெ கலாவிஜுநாது। ஸுஷிவா ஸாவுகி விது
கோம் வுகுடயதெ ஸுக வுதெஸெ ஜுஜ ஸ்ரீமொ ஸ்ரீ
கோ மியாமஸ்ருதி கலி தா வுதி கத-நுஸ்ருதிங்கனா॥



IN13123-053 01/02/2010 © Institut Français de Pondichéry ifpindia.org

## வடிவெழுத்து.

ஸ்ரீக்ஷ்ஸ்ரீஷ ஹிநாஉ லிந்ரீவிவிமிழு.
ஸகுரூஹிகாமியைழு - ஜமசு - தாயி - ஐயம் - நிஜநாஉ
மா - அ - கூழிஸா - யஎத்து - கஸாஹிழு - ஜநாநு - க்ஷி
வா-ஹாவ்ரூகி ஜிஐதாம் - வகடயகி - வனகவ்ரூஉ
ஸை - ஔம் - ஸம்ஹாழு - ஹா - தூ - நிமியாஉஸகி
கஎிதா - வ்ராகீ - கத-ரூஸ்ரூகிம் - கஸா.

(இதன்பொருள்.)

நிஜநாஉமாஅ கூழிஸா — ஸ்வபாவசித்தநாதஸ்வரூபையான சிவசமவேத க்ரியாசக்தியா லதிஷ்டிக்கப்பட்ட குண்டலினீ சக்தியானது,

ஸ்ரீக்ஷ்ஸ்ரீஷ நிநாஉலிந்ரீ விவிமிழு — சூக்ஷ்மங்களாயும் ஸ்தூலங்களாயு மிருக்கின்ற நாத பிந்து வர்ண ரூபங்களான

ஸகுரூஹிகா மிமியைழு — குண்டலினீ சக்தியினது மூதற்கா ர்யங்களோடும்

கஸாஹிழு — நிவர்த்யாதி பஞ்சகலைகளோடும்

ஐயிபம் — மஹாமாயை மூதலான மூன்று மா யாரூபமான

ஜமசு — ஸ்தாவர ஜங்கமரூப ஸமஸ்த ஜகத் துக்களையும்;



(தாரா) — அப்படியே

ஜநாநு — அநந்தேஸ்வரர் மூதலான ஸமஸ்த விஞ்ஞானகலாலம்ப வர்க்கங்களையும்

யஎித்து — ஆதாரமாய்த் தரிக்கின்றது.

ஸாகஸாதூ — ஆத்மாக்களின் கர்த்ருத்வ சக்தியை ப்ரகாசிப்பிக்கின்றமையால் கலை யென்னும் ப்ரசித்தமான பெயருள்ள கலாதத்வமானது

ஸம்ஹாழு — அநந்தேஸ்வரருடைய

நிமியாம ஸக்திகமிதா — இச்சாரூபமான த்ரோதான சக்தியா லதிஷ்டிக்கப்பட்டதாய்

வாவ்ரூகி ஜிஐதாம் — மலாவர்ண முள்ள சேதநர்களுடைய

ஐம — அநாதியான ஆணவமலத்தை

வனகவ்ரூஉஸை — ஓரிடத்திலொதுக்கி

கூழிவா — தள்ளிவிட்டு

வ்ராகீ — மூன்னமேயுள்ள ஸ்வதந்த்ர ஞான க்ரியாரூபமான

கத-ரூஸ்ரூகிம் — கர்த்ருத்வ சக்தியை

வகடயகி — கொஞ்சம் ப்ரகாசிக்கச் செய்கின்றது.

நாதபரியம்.

நாதமென்றது - த்வனி, இரண்டு கட்டை விரல்களாலு மிரண்டு காதுகளையும் மூடிக்கொண்டால் கேட்கு மோசை யே த்வனியென்னப்படும் ; அதுதான் நாதம்.

விந்துவென்றது - ஸ்வரம் - வர்ணம் - நிவர்த்திமுதலான கலை-இவை தோறறி யொடுங்குமிட மென்னப்படும்.

லிபியென்றது - அக்ஷரம். இவை சூக்குமரூபங்க ளென்னும் ஸ்தூல ரூபங்களென்று மிருவகையாம். இவை மஹாமா யையென்னும் குண்டலினீசக்தியிலிருந்து முதலி லுண்டான காரியங்களாகும். எப்படியெனில்?

சக்தியினது முதல் க்ஷோபத்தால் த்வனிரூபமான நாத முண்டாகின்றது ; அதுதான் அபரநாதம்.

இரண்டாவது க்ஷோபத்தால் சங்கல்பரூபமான விந்து வுண்டாகின்றது ; அதுதான் அபரவிந்து.

மூன்றுவது க்ஷோபத்தால் வர்ணரூபமான அக்ஷரமுண் டாகின்றது.

இவ்விடத்து சுத்தாத்வாவில் சூக்கும நாதாதிகார்யமெ ன்னும், அசுத்தாத்வாவில் ஸ்தூல நாதாதிகார்யமென்னும, பிரி வறியவேண்டும்.

இந்த நாத விந்து வர்ணங்கள், பரவிந்துவினது முதற் காரியங்கள். இவ்விடத்துக் காரியவிந்துவினது ஸ்தூலாவஸ் தையானது மிக ஸ்தூலமாகும்போது வைகரியென்றும், கொ ஞ்சம் ஸ்தூலமாகும்போது மத்யமையென்னும், இருவகையாம். சூக்குமாவஸ்தையானது மிக சூக்கும மாகும்போது சூக்கு மையென்னும், கொஞ்சம் சூக்குமையாகும்போது பஸ்யந்தியெ னறு மிருவகையாம்.



மார்பு சமுத்ர தலே காலினடி பல் மூக்கு உதடு தாலு இவை வர்ணங்களி னுற்பத்தி ஸ்தானங்களாகும். இவ்விடங் களில் காற்றைத் தடுக்கும்போது எழுத்தாகத்திரண்டு காற்று மேல் கிளம்பும்போது வெளியில் வந்து பிறர் கர்ணகேட்க வுச்சரிக்கப்பட்டுக் கடாபிதார்த்தங்களைச் சொல்லும் வாக் கான தவர்ணமென்றும், வைகரீவாக்கெல்லாம், சொல்லப் படும். அது தனக்கு முன்னிருக்கும் மத்யமை வாக்கைவிட அதிக ஸ்தூலமாயிருக்கும்

புத்திபால்மாத்திர மறியத்தக்கதாயும், உள்ளடங்கிய வுச்சரிப்பாயும், பிறர்காதில் கேளாமலும், எழுத்துமுறை யுள் ளதாயு மிருக்கும் வாக்கானது மத்யமைவாக்கென்னப்படும். அது பசியந்தியின் காரியமாகும். காரிய விந்துவினது மத்ய ஸ்தூலாவஸ்தையாகும்.

மயில்முட்டை ரசம்போல வர்ணங்கள் பிரிந்து தெரியா மல் முன்பின் முறையில்லாமல் பொருள் நிச்சயஞ் செய்யப்ப டாமல் ஸ்வயம்ப்ரகாசமா யிருக்கும் வாக்கானது கார்ய விந் துவினது முதலவஸ்தை, சூக்குமைவாக்கினது விகாரமான பசியந்தி யென்னப்படும்.

ஒரு விசேஷமுமின்றி அர்த்தஸ்வரூபத்தை மாத்ரம் ப்ர காசிப்பித்துக்கொண்டு உள்ளோளோதியாய் தெடுகாள் நிலை நிற்பதா யிருக்கும் வாக்கானது நாசமென்னும் பெயருள்ள சூக்குமை வாக்கென்னப்படும்; இதுதான் சுத்தாத்வ வாசிக சூக்கு முக்யமான பக்தமாகும். இதைப் பிரித்தறிக்தவர் பஞ் சக்ருத்யாதிகாரத்தை விட்டுச் சிவஸமான முக்தியடைகின் றார்கள்.

அதுவே ப்ரளயாகலர்களுக்கும் க்ஷோடசகலாரூபமான சூக்கும சரீரத்தின் பதினாலுகலைகளி லொன்று யிருக்துகொ

ண்டு அவர்களே மோகூம்வரையில் விடாமல் ஒரு யோகியை விட்டு மற்றொரு யோகியில் சேர்த்துக்கொண்டிருக்கிறது.

சூக்குமசரீரத்தின் பதினறுகலேகளாவன? கண்மேந்திரி யமைந்து ஞானேந்திரியமைந்து ஆ - க0. மனம் அஹங்காரம் புத்தி வித்தை வாக்கு சக்தி - சு, ஆக-கசு. இவற்றுள் பதினறு வதான சக்தியே சூக்குமவாக்கு. அது முக்யமான பத்மா கும். இத்தப்படி ஜங்கமரூபமான ஜகத்விஷயமாகிய நாதாதி கார்ய மறிக.

ஸ்தாவர ரூபமான ஜகத்விஷயமாகிய நாதாதி கார்யம் வருமாறு:—மஹாமாயையிலிருந்து ஜங்கமவிஷயத்திற்கு மூ தல் நாதமுண்டானதுபோல ஸ்தாவரவிஷயத்திற்கு முதல் புவநமுண்டாயிற்று. ஆதலால், நாத கலா புவநங்கள் இந்தி கை மூகலனவை சிவதத்வத்தி லிருக்கின்றன வென்னப்படும். நாதகலேயில் இந்திகை முதலாகிய புவநங்களுண்டு. அவையா வன? இந்திகை நிபிகை ரோசிகை மோசிகை ஹுத்வகை என் றவிலுண்டான நிவாந்தி ப்ரதிஷ்டை வித்தை சாந்தியெனும் வித்தகலாபுவநங்கள் நாலும் சொல்லப்படுகின்றன. இவை சக்திதத்வத்திலிருக்கும் நாதகலா புவநங்களுக்கு உபாதானகா ரணமான பரவிந்துவில் சக்திரூபமாயிருப்பது சூக்குமாவஸ் தையாகும். புவநரூபமாக வியத்தமாய் வெளியில் தோற்றுவது ஸ்தூலாவஸ்தையாகும். சக்திதத்வத்திலடங்கிய நிவர்த்தியாதி புவநங்கள் சூக்குமங்கள். ஆன்மாக்களுக்கு சரீரேந்திரிய வி ஷய போக ஸ்தாநங்களாகிய ப்ருதவியாதி பூதரூபங்களான நிவர்த்தியாதி கலேகள் ஸ்தூலங்கள். இப்படியாக சக்தியாதி கார்யங்களே யறிக.



மாயியமென்றது முன்னுவித மாயாமய மென்றதாம்.

அல்லது சக்தியாதிகார்யங்க ளென்னுமிடத்துச் சக்தியென் றது சக்திதத்வம். ஆதிபதத்தால் சதாசிவாதி தத்வங்களேக் கொள்க. ஆகவே சூக்குமஸ்தூல நாத விந்து வர்ணங்களென் னுமிடத்து முறையே சக்திதத்வத்தில் சூக்கும நாத விந்து க்கள், சதாசிவதத்வத்தில் ஸ்தூல நாத விந்துக்கள், ஈஸ்வர தத்வத்தில் சூக்குமவர்ணங்களோடு கூடிய அநந்தேஸ்வராதி கள், வித்யாதத்வத்தில ஸ்தூல வர்ணங்களோடு கூடிய சப்த கோடி மஹாமந்த்ரங்கள், வைகரீரூபக்களான காமிகமுத லான இருபத்தெட்டாகமங்களு மிருக்கின்றன என்றுங் கொள் ளலாம். இப்படிக்கொத்த மாயாமயமான ஸமஸ்தஜகத்தை யும் குண்டலினீ சக்தி தரிக்கின்றதென் றறிக.

கந்தத்திலுண்டான அங்குரம்போ லிருப்பதால் குண்டலி யினை குடிலேயென்றது. அது ஜடரூபமாதலால் ஜகத்துக் காதாரமாகமாட்டாது. ஆதலால் சிவசமவேத க்ரியாசக்தியால் அதிஷ்டிக்கப்பட்டுத் தரிக்கிறதென்பது கருத்து.

ப்ரம்மாண்ட கண்டத்தில் ஜகத்துக் காதாரமான சக்தியி ருக்கிறது. அது லாவத்தையும் கூறாகிக்கின்ற சிவசமவேத க்ரியாசக்தியாகும். அது ஸகலதத்வங்களிலும் வ்யாபித்துச் சகல வித்துக்களிலு மூனேக் காதாரமாயிருந்து ப்ரம்மாண்ட தத்தை வ்யாபித்து க்ஷீரசமுத்ராதி லிருந்து வெளிப்பட்டு மறு படி அண்டத்தைப் பேதித்துக் கந்தத்திலுதித்த மூனேபோலிரு க்கும். அது ஜலதத்வமுதல் அஹங்காரதத்வம்வரையில் வ்யாப மாகும். அதற்கு ஜலதத்வம் நனேப்பதாயும்; அக்நிதத்வம் நீரை யிழுப்பதாயும், வாயுதத்வம் அசைவிப்பதாயும், ஆகாசதத்வ மிடங்கொடுப்பதாயும், தன்மாத்ரைகள் மூனேகளாகவும், இந் த்ரியங்கள் ரந்த்ரங்களாகவும், அஹங்காரம் கபிலரிலிருந்து பல

வ்ருத்தியைக் கொடுப்பதாயு மிருக்கும். இப்படியாக ஸர்வகாரணமான அந்தமூலே வளருகிறதென்று சொல்லியபடி குண்டலினீ சக்தியானது நிவர்த்தியாதி டஞ்சகலேகளோடும் சமஸ்த ஜகத்தையுந் தரிக்கின்றது. பிண்டும் அநந்தேஸ்வராதிகளுக்குச் சரீராதிகளே யுண்டாக்குவதால் அவர்களேயும் தரிக்கின்றது. இ5 லால் மாயைக்குமேல் சுத்தாத்வாவில் சக்தித்தத்வத்தில் போக மாகும். அதற்குப் போக்தாக்கள் வித்யாதத்வ ஈஸ்வரதத்வ புவநங்களிலிருக்கு மந்த்ரேஸ்வரர் முதலானவர்களாகும். அதற்குச் சாதநங்களான சரீரேந்த்ரிய விஷயங்களாகக் கலேகள் பிணமித்திருக்கும். அந்தக் கலேகளுக்குங் குண்டலினீசக்தியுபாதாந காரணமாகு மென்றவாறு.

இந்தக் கலேக ளுண்டானதற்குப் பயனென்னெனில்? அனவயில்லாவிடில் மந்த்ர மந்த்ரேஸ்வரர்களுக்கு அதுக்கிரஹாதிக்ருத்யங்களில் அதிகாரமினமையால் அவர்களுக்கு அதிகாரமளித்திப்பதே பயனாகும். மஹதத்வ முதலானவத்திற்குப் பிரதாநமாவதுபோலவும், இராகாதிகளுக்கு மாயை யுபாதாந மாவதுபோலவும், நிவர்த்தியாதிகலேகளுக்குக் குண்டலினீ யுபாதாந மென்பதறிக்தம்.

ஸ்வபாவிகமான ஆணவ மலத்தினுலே மறைக்கப்பட்ட ஞானமுள்ளவர்களாயும், பலவித துக்காதிக் கேதுவான கர்ம வரிசையினுலே கட்டப்பட்டவர்களாயும், மாயாசக்தியினுலே பிறவிக் கபிமுக்கர்களாயு மிருக்கின்ற ஆன்மாக்களுக்கு மலமூடிக் கொண்டிருப்பதால் சுத்தக்கங்களே யறிவ தரிதாகும். ஆதலால் அந்த மலமறைவை நீக்க ஒரு கருவிவேண்டும். அதுதான் கலாதத்வமாகு மென்னுங் கருத்தை யிந்த ஸ்லோகத்தின பிரபாதியில் வெளியிடுகிறார்.



ஸ்மஹே என்றதால்; சுத்தாத்வவிஷயத்தில் சிவனென்றும், அசுத்தாத்வவிஷயத்தில் அநந்தேஸ்வரரென்றும், கொள்ளவேண்டும். சுத்தாத்வாவில் சூக்குமங்களாகக் கலே ராக முதலானவை யுண்டு. அவற்றிற்குச் சிவன் கர்த்தாவாகும். அசுத்தாத்வாவில் அநந்தேஸ்வரர் கர்த்தாவாகுமென் றறிக.

கலே அசேதநமானதாலும், கர்த்ருத்வம் சேதநதருமமானதாலும், ஆன்மாவினது கர்த்ருத்வம் சக்தியுண்டாகக் கலேயுபாதாநமாகாதென்று நினைத்து நிமியாம ஸஹிகமிதா என்றார். சிவனது இச்சாரூபமான த்ரோதாநசக்தியாலதிஷ்டிக்கப்பட்டுண்டாக்குகிறதென்று கருத்து.

எங்கு மூடிக்கொண்டிருக்கும் மஹாந்தகாரத்தில் தீபமானது அந்தகாரத்தை யொருபக்கத்திலொதுக்கி விஷயத்தைக் காட்டுவதிபோல, எங்கு மறைத்துக்கொண்டிருக்கு மலத்தை யொருபக்கத்தில் தள்ளி ஞானத்தை ப்ரகாசிப்பிக்கிறது கலே யென்பர். முன்னமே ஆன்மாவிலிருக்கும் கர்த்ருத்வ சக்தியைப் பிரகாசிப்பிக்க அநந்தேஸ்வரர் மாயையை க்ஷோபித்து கலாதத்வத்தை யுண்டாக்குரென்பது கருத்து. (கூ)

## அவதாரிகை.

கர்த்ருத்வ சக்திக் குபதாகமாகிய கலேயானது விஷய ஞானத்தை ப்ரகாசிப்பிக்கும் விஷயத்தில் வித்யா தத்வம் காரணமாகும். வித்யா தத்வத்தால் ப்ரகாசித்த ஞானசக்தியால் விஷயங்களேயறிந்த ஆன்மாக்களுக்குப் போக்ய வஸ்துக்களில் அபிலாஷை யில்லையாகில் ப்ரவிர்த்தியில்லேயா மாதலால் அபிலாஷத்தை யுண்டாக்க ராகதத்வம் கருவியாகும் என்று வித்யாதத்வம் ராகதத்வம் இரண்டிலிலக்கணம் கூறுகிறார்.

IN13123-057 01/02/2010 © Institut Français de Pondichéry ifpindia.org

## கரு — மொழி.

ஜாநஞ் தமதம் பகாஸயதி நஜாந் புராக்
கர்மஸக்தவிலங்காந் விஜ்ஞாக்ஷமதாக்ஷ மொஹா
யிய ஸஜ்ஞாஹயதாஞ்ஜரீ। வளஸா மெஷயிகாச்
வரஸ மணெகொ ராமவ்யவ்ருத்த நயணாம் ஹொ
மெவுக்த ஊர்ஜாம் வ்யஹார ஜநயந்ஜ் ஜாதாவிகா
செஷுஷ்விஹ॥

## வகுப்பு.

ஜாநம் - அ - தமதம் - பகாஸயதி - நஜா
நந் - புராக் - கர்மஸக்தவிலங்காந் - விஜ்ஞா - க்ஷமத
மதாக்ஷ மொஹாயியம் - ஸஜ்ஞாஹயந் - ஜ்ஞாஞ்ஜரீ.
வளஸாச் - மெஷயிகாச் - வரஸ் - அ - மணெந்
ராமஸ் - வ்யவ்ருத்த - நயணாம் - ஹொமெ - வுக்த
ஊர்ஜாம் - வ்யஹாம் - ஜநயந் - ஜாதாவிகா செஷு
ஷ் - இஹ -

(இதன்பொருள்.)

விஜ்ஞா — விஷயத்தை யறிவிப்பதால் வித்தை யென்னுங் காரணப் பெயருள்ள வித்யாதத்வமானது

புராக் — முன்னமேயுள்ள



கர்ம்ஸக்தவிலங்காந் — கர்த்ரு சக்தியோடு கூடிய மலபத்தாள்மாக்களுக்கு

நஜாந் — மலபத்தாள்மாக்களுக்கு

தமதம் — மலத்தினாலே மறைக்கப்பட்ட ஆன்மாவிலிருந்து மில்லாதது போல

ஜ்ஞாநம் — உள்ளடங்கிய விஷயஞானத்தை

பகாஸயதி — விஷயத்தை யறிய வல்லமையுள்ள தாகப்ரகாசிப்பித்து

க்ஷமதா க்ஷமொஹாயியம் — மனதிற் கெட்டினவெளி விஷய வஸ்துக்களை க்ரஹித்து நிச்சயிக்கும் புத்தியை

ஸஜ்ஞாஹயந் — நல்முகக் கூட்டுகின்றது.

ஜாந் — ஆதலால்

ஜ்ஞாஞ்ஜரீ — ஆன்மாவிற்கு விஷயஞானப் பிரகாசத்தி லிந்த வித்யாதத்வமானது அந்தரங்க கருவியாகும்.

வளஸாச் — புத்தி தருமமான

மணெந் — அவைராக்ய குணத்தை விடவும்

வெஷயிகாச் மணெந் — புஷ்ப சந்தன முதலான விஷய குணத்தை விடவும்

வரஸ் — வேறான

ராமஸ் — ராகமென்னும் தத்வமானது

ஹஹ இவ்விடத்து
வுவரூத்த சுக துக்க ரூபமாக ப்ரவர்த்தித்து
ஹொமை போகத்தில்
வுகூரூஸாம ப்ரகாசித்த
ரூணாம ஞானமுள்ள பத்தாத்மாக்களுக்கு
ஜாதாவிஸா காணப்பட்ட ஸமஸ்த புஷ்ப சந்த
ஞ்செமுஷ்ம னமுதலான வெளிவஸ்துக்களில்
வுரூஹாம இச்சையை
ஜநயதி யுண்டாக்குகின்றது.

தாத்பரியம்.

கலாநத்தவமே மலத்தை யோரிடத்தில் நீக்கி ஞானத்தைப் பிரகாசிப்பிக்குமென்று சொல்லி வித்தையென்று மோர்ந்தவத்தை சாதிப்ப தேதுக்கென்னில்? கலை கருவியின்றி ஞானத்தை ப்ரகாசிப்பிக்க வல்லதன்முகையால் வித்தைவேண்டும். இந்தவித்தையானது கருமத்தின் வழியாய் ஞானசக்தியை மறைத்துக்கொண்டிருக்கும் மலாவரணத்தை நீக்கி விஷயத்தை ப்ரகாசிப்பிக்குமென்பது கருத்து.

புத்தியென்பது போதவியத்திக் காஸ்ரயமாதலால் விஷயத்தைக் ரஹிக்கப் புத்தியென்னுங் கருவி சித்தமாயிருக்க அதற்கு வேறுக வித்தையைச் சொல்லுவா னேனென்னில்? வித்தைதான் ஆன்மாவின தஞானசக்திக்கு வியஞ்சகமாகும், புத்தி மனதோ டுகூடிய இத்திரியங்களுக்கு வெளிவிஷயங்களைத் தெரிவிக்கும் என்று வித்தைக்கும் புத்திக்கு மூள்ள விஷயபேதத்தைத் தெரிவிக்கிறார். சுகேஷுமதாக்ஷமொ அரூயியம் என்று ஆன்



மாவிற்கு மனங்கலந்த இத்திரியங்களால் வெளிவிஷயங்களை ரஹிக்கும்போது புத்தி கருவியாகும். அந்தப் புத்தியாகிய உள் விஷயத்தை ரஹிக்கும்போது வித்தை கருவியாகும். ஆகையா லேதான் இது ஆனமாவிற்கு அந்தரங்கமான கருவியென்றது. புத்தி வெளியகமாகும்.

அவைராக்யமென்னும் புத்தி தருமமே ராகமென்று கொள்ளில்? புத்தி விஷயவழிவாய் சுகாதி ரூபமாய் போக்யமாகுமென்று சொல்லியிருப்பதால் அதற்கு போகத்தில் அபிலாஷத்தைக் கொடுக்க வல்லமையில்லை. ஆதலால் புத்தி குணத்திற்கு வேறுன ராகமென்று மோர் தத்வம் வேண்டும். விஷயகுணமே ராகமென்னில்? புஷ்ப சந்தன ஸ்திரீமுதலான விஷயம் சமீபித்த மாத்ரத்தில் யாவர்க்கும் ராகமுண்டாகவேண்டும். அப்போது விரக்த னொருவனு மில்லாமற் போகவேண்டிவரும். அப்படியில்லைபாதலால் விஷயகுணத்திற்கு வேறுன ராகதத்வம் வேண்டுமென்பது கருத்து.

ஆனல் மாயை மயக்குமாதலால் அதுவே ராகமாகட்டும், வேறுராகமேனெனனில்? மாயை தேரிட மயக்காது; இத்தராகத்தையுண்டாகி யதன்வழியாக மயக்குமென்றறிக. இத்தராகம் பத்தாத்மாக்களுக்கு விஷயேச்சையைக் கொடுக்கும், நின்மலரான முக்தாத்மாக்களுக் குண்டாக்கமாட்டாது என்றறிக. கஉ

அவதாரிகை.

ஆன்மாக்களுக்கு நீர்க்குமிழிபோல நிலையில்லாத பால்யம் யௌவநமுதலான பலவித அவஸ்தையுள்ள சரீரத்தின் பரிணுமம் காலவசத்தா லுண்டாகுமாதலால் இந்தக் கலை வித்தை ராக தத்வங்களுக்கு முன்னமே காலமென்று மோர்தத்வமுண்டு. பின்னு மவர்களுக்கு முனசெய்த கன்மத்திற் கேடாக எக்காலதேசாதிகளில் எவ்வளவு சுகதுக்காதிகளை யநுபவிக்கவேண்டி

IN13123-059 01/02/2010 © Institut Français de Pondichéry ifpindia.org

யதோ அத்தக்கால தேசாதிகளில் அவ்வளவு சுகதுக்காதிகளு யேறக்குறைவில்லாமல் அநுபவிக்கும்படி நியமனஞ்செய்ய நியதி யென்னு மோர்தத்வ மூண்டு என்னு காலநியதித்வங்களிரண் டையுங் கூறுகிறார்.

கச—ஸ்ரோகழி.

